**Sales Reps. Welcome**
**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)
HOMELIFE HIGHER STANDARDS
• INDEPENDENTLY OWNED AND OPERATED
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666



17 வது வருடத்தில்

# விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978



வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
**WALK IN DENTAL CLINIC**
**Dr. Iru Vijayanathan**
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்



நதி 17 பாலம் 15 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் AUGUST 01, 2007




நீண்ட நாள் வாழ நினைத்ததை அடைய

03



தந்தையும் தனயனும்

05


INDEPENDENT ART FILM SOCIETY
6ஆவது தமிழ் குறும்பட, விவரணத் திரைப்பட விழா ஒக்ரோபர் 06, 2007
படைப்புக்கள் கிடைக்க வேண்டிய இறுதி நாள் புரட்டாதி 15, 2007
416-857-6406 / 416-450-6833


## குடியுரிமைத் தினம்
## Civic Holiday

கனடா எங்கணும் குடியுரிமைத்தினம் என ஒரு நாள் பொது விடுமுறையாக விடப்பட்டுள்ளது. குடியுரிமை பெற்ற கனேடியர்களைக் கௌரவிக்கும் முகமாக இத்தினம் கொண்டாப்படுகிறது. கனடாவின் சிற்சில மாகாணங்களில் வெவ்வேறு தினங்களில் கொண்டாடப்பட்டாலும், ரொறொன்ரோவில் ஆகஸ்ட் மாதம் முதலாம் வாரம் வரும் முதலாம் திங்கள் பொதுவிடுமுறையாகப் பிரகடனப்படுத்தி அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இது 1861ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி முதன்முதலாக ரொறொன்ரோவில் தொடங்கப்பட்டாலும் பின்னர் ஆகஸ்ட் மாதத்துக்கு மாற்றம் பெற்றது.

நாட்டுக்காக உழைத்த பழைய குடிமக்களைச் மகிழ்ச்சிப்படுத்தவும், புதிதாகக் குடியுரிமை பெற்று வருபவர்களுக்கு வரவேற்பளிக்கவும், நாட்டின் மீது நம்பிக்கை ஊட்டவுமான நோக்கங்களைக் கொண்டது இவ்விடுமுறை. அதற்காகவே மக்கள் ஓய்வாக இருக்கவும் ஆடிப்பாடி மகிழவும் ஏற்றதாக இத்தினம் பொதுவிடுமுறைத் தினமாகக் கணிக்கப்படுகிறது.

அதேசமயம் ஒருகுடிமகனின் நாட்டுக்கான கடமைகள் எவை, தமக்கான உரிமைகள் எவை, சலுகைகள் எவையெவை, பொறுப்புக்கள் எவை என்பனவற்றை அறிவுறுத்தும் தினமாகவும் பயன்படுகிறது. இது சம்பந்தமான போட்டிகள், சுவரொட்டிகள், விளம்பரங்கள், பிரசுரங்கள் வழங்கி மக்கள் கற்றுக்கொள்ளவும், மீள வலியுறுத்தப்படவும் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

எனவே ஒவ்வொருவரும் நற்குடிமகனாக விளங்கவேண்டிய அவசியம் இத்தினத்தால் அறிவுறுத்தப்படுகிறது.

# வீட்டுச் சிறைகளில் கிழக்குத் தமிழர்கள்!

கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகளை சுத்தமாக வெளியேற்றிவிட்டோம் என்று இலங்கை அரசு தம்பட்டம் அடித்துக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. அரசு மட்டுமல்ல அரசுடன் சேர்ந்து இயங்கும் தமிழ் கட்சிகளும், குழுக்களும் கூட மிக மகிழ்சியாக இருக்கின்றன. கிழக்கை மீட்டது போல வெகு இலகுவாக வடக்கையும் இலங்கை அரசு மீட்டெடுக்கும் என்று தமிழர் சிலர் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் உண்மையில் அங்கு என்ன நடக்கின்றது.

மீள் குடியேற்றப்படும் இடம் பெயர்ந்த கிழக்குத் தமிழர்களை சந்தேக நபர்கள் என்று புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றது. அவர்கள் வீடுகளை விட்டு வெளியேறக் கூடாது என்று வீட்டுச் சிறைகளில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பி.பி.சி சிங்களச் சேவை அம்பலப்படுத்தியுள்ளது.

வீடுகளுக்கு திரும்பிச் செல்லும் ஒவ்வொருவரையும் சிறப்பு அதிரடிப்படையினர் புகைப்படம் எடுக்கின்றனர் என்றும், சந்தேகத்திற்குரிய ஆண்களை மீண்டும் படம் எடுக்கின்றனர் என்றும் பி.பி.சி செய்தியில் சொல்லப்பட்டுள்ளது.

இராணுவத்தின் இந்த புதிய கெடுபிடியால் ஆண்கள் வருவாய் ஈட்டமுடியாமல் தடுக்கப்பட்டுள்ளனர்.

"எங்களது வீடுகள் முற்றாக அழிந்துவிட்டன. வீடுகள் அங்கு இல்லை. மீள் குடியேற்றம் என்று ஒரு முகாமில் எங்களை தங்கச் சொல்லுகின்றனர். அங்கு உரிய கழிப்பிட வசதிகள் இல்லை. பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. தடுப்பு வலைகளோ சுற்றுச் சுவரோ இல்லை. வழங்கப்படும் அரிசியை சாப்பிட முடியவில்லை. சாப்பிட்ட குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு ஏற்படுகின்றது. அதை நாம் தெரிவித்த பின்னரும் தொடர்ந்து அதே அரிசியே வழங்கப்படுகின்றது" என்று பெண்கள் பிபிசிக்கு தெரிவித்துள்ளனர்.

இதேசமயம் புலிகளின் வெளியேற்றத்தின் பின்னர் பல நூற்றாண்டுகளாக பரம்பரை பரம்பரையாக தமிழர்கள் வாழ்ந்த கிழக்குத் தமிழர்களின் வாழ்விடங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற எல்லா ஏற்பாடுகளும் நடைபெறுகின்றது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

சம்பூரில் தமிழர்களை வெளியேற்றிய பின்னர் அப்பிரதேசம் அதி உயர் பாதுகாப்பு பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 03 ஆம் பக்கம்


**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

**Real Education**
**உண்மையான கல்வி**
அறிவுத்திறன் + பண்பு
Classes for 9 to 17 years old
Focus, Memory, Reading Skill, Listening Skill, Presentation Skill, Goal Setting, Self-Confidence, Self-Discipline - Patience - Obedience, Positive thinking, Team Work, Winning Attitude, Leadership...
Tel.: 416-725-5112
KG Master www.kgmaster.com
Education = Intelligence + Character

• 1ST, 2ND, 3RD MORTGAGES
• BAD CREDIT
• UNEMPLOYED
• POWER OF SALE
• SELF-EMPLOYED
• CAR & TRUCK LOANS
(instant approve)
Chandran Ponnampalam
Senior Mortgage Consultant
Trillium Mortgage
Direct: 416.666.5540 Office: 416.279.1159

**துரித பணமாற்றுச் சேவை**
• 49 வருடங்கள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 16 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
**மு. காசிப்பிள்ளை & சன்ஸ்**
416.267.8221

அடமானக் கடன் செய்து கொடுப்பதே!
என் பணி
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM Veedu Mortgages Inc.

Buy & Sell Residential and Commercial
Raj A. Rasaratnam B.Com.
Sales Representative
416-726-8055
வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க
HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
*Independently owned and operated
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON M1S 3Y3

வாழ்வு-வியாபாரம்-முதலீடு
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife GTA Realty Inc., Brokerage *
Shiva Sharmah
Sales Representative
416-666-5515
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd.
Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

# உங்கள் நிதியமும் பணச்சந்தையும்

கனடிய டொலரின் மதிப்பு மீண்டும் ஒரு புதிய உச்சத்தை முப்புது ஆண்டுகளில் தொட்டிருக்கின்றது. இந்த வருட ஆரம்பத்தில் ஒரு அமெரிக்க டொலரின் மதிப்பு 1.17 கனடிய டொலராக இருந்தது. அது இப்போது 1.04 ஆக மாறியிருக்கின்றது. இதன் பொருள் கனடிய டொலரின் மதிப்பு உயர்ந்திருக்கின்றது. அமெரிக்க டொலரின் மதிப்பு வீழ்ந்திருக்கின்றது. கனடியடொலரில் அமெரிக்க டொலரின் மதிப்பைச் சொல்ல வேண்டும் என்றால் ஒரு கனடிய டொலருக்கு 0.96 அமெரிக்க டொலர் கிடைக்கின்றது. செப்ரெம்பர் ஐந்தில் மீண்டும் Bank of Canada வட்டி வீதத்தை உயர்த்தும் என்பதற்கான அறிகுறியாகவே பலரும் இந்தப் போக்கை கருதுகிறார்கள்.

**பெரி. முத்துராமன்**

சரித்திரம் மீண்டும் திரும்புகின்றதோ என்று சந்தேகிப்பவரும் இன்று நம்மிடையே இல்லாமல் இல்லை. 1980களில் இதேபோல ஒரு வழமையான காலம் கனடாவில் இருந்தது. விலைவாசிகள் மேலும் மேலும் ஏறிக்கொண்டே சென்றது. நுகர்வோர் செலவு செய்ய அஞ்சவில்லை. இந்த நேரத்தில் விலை வாசியைக் கட்டுப்படுத்த Bank of Canada வட்டி வீதத்தைத் தொடர்ந்து உயர்த்த ஆரம்பித்தது. வட்டிவீத உயர்வால் கனடியச் சந்தையில் வீட்டு விலைகள் சரிந்தன. 1990களில் பொருளாதார மந்தம் பலமான தாக்கத்தைத் தர ஆரம்பித்தது.

1980 களோடு இன்றைய நிலையை ஒப்பிடுவது சரியில்லை என்று வாதிடுவோரும் உள்ளனர். அமெரிக்கர்களைப் போல முற்றிலும் கடனிலேயே கனடியர்கள் வாழ்வதில்லை. குறிப்பாக வீடுகள் வாங்கும் போது மக்களிடமும் சரி, வங்கிகளிடமும் சரி, கனடாவில் ஒரு நிதானப் போக்குத் தென்படுகின்றது. நுகர்வோரின் வாங்கும் திறன் வலுவானதாகவே உள்ளது. பெரும்பாலோர் 40 வயதுக்குட்பட்டவர்களே. மேற்குக் கனடாவில் கிடைக்கும் எண்ணை வளம், அங்கு நுகர்வோரை வலுவடையச் செய்துள்ளது. கனடிய டொலரின் மதிப்பு 2003 இலிருந்து தான் உயர ஆரம்பித்தது. அப்போதிலிருந்துதான் நுகர்வோரின் செலவழிப்பும் உயர ஆரம்பித்திருக்கின்றது. நுகர்வோர் செலவழிப்பு அதிகரிப்பு 2003 இல் 3 சதவீதம், 2004இல் 3.4 சதவீதம், 2005இல் 3.8 சதவீதம், 2006இல் 4.2 சத வீதம். 20 வருடங்களுக்கு முன் கனடிய மத்திய அரசிடம் நிதிப் பற்றாக்குறை இருந்தது. ஆனால் இன்றைய நிலைமையோ வேறு. இன்றைய கனடிய மத்திய அரசு ஒரு புறம் தாராளமாகச் செலவு செய்கின்றது. மறுபுறம் வரிகளையும் சற்றே குறைக்கின்றது. பொருள் உற்பத்தித்துறையில் வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளது என்பது மட்டும் தான் இன்றைக்கு இருக்கக்கூடிய ஒரு எதிர்மறை அம்சம்.

1989இல் கனடாவில் விலைவாசி ஏற்றம் 5 சதவீதம். ஆனால் இன்றோ 2.2 சதவீதம் தான். இதையும் கட்டுப்படுத்த இப்போதே Bank of Canada வட்டியை உயர்த்தும் நடவடிக்கையை ஆரம்பித்து விட்டது. ஆனாலும் 1989இல் இருந்ததைப்போல் 13, 14 சதவீதம் என்று வட்டி வீதங்கள் உயரும் என்று யாருமே நம்பவில்லை.

எது எப்படியோ சமாளிக்க முடியாத கடன்களை ஒருநாளும் வாங்காதீர்கள். கடன் வாங்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியது ஒன்றே ஒன்று தான். கிடைக்கும் பலன் கொடுக்கும் வட்டியை விட கூடுதலாக இருக்கிறதா என்று பார்ப்பதுதான் அது. 19 சதவீத வட்டியில் கடனட்டையில் காசு எடுத்து உல்லாசமாகச் செலவு செய்தால் அழிவை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம். அப்படி இல்லாது 6.5 சதவீதத்துக்கு கடன் வாங்கிச் செய்த முதலீட்டில் 10 சதவீதம் வட்டி வருகின்றது என்றால் அது புத்திசாலித்தனம். கடன் வாங்கும் போதே, தவணையை ஒழுங்காகச் செலுத்த வசதி இருக்கிறதா என்று எண்ணிப்பார்த்து வாங்க வேண்டும். கடன் கிடைக்கின்றது என்பதற்காக கடன் வாங்கக் கூடாது. பழைய சினிமாப் பட வரிகள் தான் நினைவுக்கு வருகின்றது. வரவு எட்டணா, செலவு பத்தணா எனறால் மீதி துண்டணா தான். "கடன்பட்டான் நெஞ்சம் போல" என்று தமிழில் ஒரு உவமானம் சொல்வார்கள். தன்மானம் உள்ளவர்கள் திருப்பிச் செலுத்தும் தகுதிக்கு மேல் கடன் வாங்க அஞ்சுவார்கள். வாழ்வு சிறக்க, குடும்பத்தில் நிம்மதி நிலவ இந்த மனப்பான்மை அவசியமாகின்றது. கடனுக்கு வெளியே வந்தால் ரொறொன்ரோ பங்குச்சந்தையின் வீழ்ச்சி தான் தெரிகின்றது. பங்குச் சந்தையில் விலையை உயர்த்துவது "இலாபம்" தான். பல நிறுவனங்களின் இலாபம் எதிர்பார்த்த அளவிற்கு இல்லை. அமெரிக்க பொருளாதாரத்தைப் பற்றிய பயம், உலகம் முழுவதும் உயர்ந்து வரும் வட்டி வீதங்கள் போன்ற மேலும் பல காரணங்களினால் திடீரென்று யூலை 25இல் உலகம் முழுவதும் பங்குச்சந்தையில் விலைகள் சரிந்தன. மூன்றாண்டுகளில் முதல் முறையாக 400 புள்ளிகள் அல்லது 2.8 சதவீதம் ரொறொன்ரோ பங்குச்சந்தையிலும் விலைகள் சரிந்தன. இந்தப் போக்கு மறுநாளும் தொடர்ந்தது. மறுநாளைய சரிவு 200 புள்ளிகளுக்கு மேல் இருந்தது. அதனால்தான் பங்குச் சந்தையில் முதலீடு செய்யும் போது தொலைநோக்கோடு நீண்ட காலத்துக்குப் பங்குச் சந்தையில் இருக்குமாறு பார்த்து, திட்டமிட்டு அவரவர் risk இற்குத் தகுந்தவாறு முதலீடு செய்ய வேண்டும் என்கிறார்கள்.

இறுதியாக ஒரு செய்தி - கடந்த நாலு வருடங்களில் கனடிய டொலரின் மதிப்பு உயர்வு, கனடாவில் உற்பத்தியாகி, ஏற்றுமதியாகும் பொருள்களின் விலை ஏற்றத்தை ஒட்டியே இருந்துள்ளது. கடந்த பத்து வருடங்களை எடுத்துப்பார்த்தாலும், நிலைமை ஏறத்தாழ இதுவே தான். அப்படியானால் எண்ணை மற்றும் உலோகங்களின் விலை வீழ்ச்சியடையும் போது, கனடிய டொலரின் மதிப்பும் குறைய வாய்ப்புக்கள் நிறைய உள்ளது. தங்கத்தைப் பொறுத்தவரை, அமெரிக்க டொலரின் மதிப்பு குறையும் போதெல்லாம் தங்கத்தின் விலை உயர்ந்து வந்துள்ளது. அமெரிக்க டொலரின் மதிப்பு குறையும் போதெல்லாம் கனடிய டொலரின் மதிப்பு கூடிவந்துள்ளது. ஆக தங்கத்தின் விலை கூடும் போதெல்லாம் கனடிய டொலரின் மதிப்பும் கூடி வந்துள்ளது. கனடிய டொலரின் மதிப்புகுறையும் போது, தங்கத்தின் விலையும் குறைந்து வந்துள்ளது. தலை சுற்றுகின்றதா? அடிப்படையை மறக்காதீர்கள். வரவு பத்தாணா செலவு எட்டணா. சேமிப்பு இரண்டாணா.



இக் கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ள ஸ்கோஷியா வங்கி தொலைபேசி எண் 416.439.3040 Ext 2008.

# இந்தியாவின் முதலாவது பெண் ஜனாதிபதி

இந்தியாவின் முதலாவது பெண் ஜனாதிபதியாக திருமதி பிரதீபா பட்டீல் (Pratiba Patil) யூலை 21இல் தெரிவு செய்யப்பட்டார். 72வயது பெண்மணியான இவர் ஒரு சட்டத்தரணி ஆவர். இவர் இராஜஸ்தான் மாநில ஆளுநராக முன்பு பதவி வகித்தார். இந்திய ஜனாதிபதி தெரிவில் மத்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் (682) நாடு முழுவதுமுள்ள மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் (3,755) வாக்களிக்க தகுதி பெற்றவர்கள் ஆவர். பிரதீபா பட்டீல், சோனியா காந்தியினால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி வேட்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதீபா மகராஷ்ட மாநில நாடாளுமன்றத்திற்கு 1962இல் ஓர் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். அதுவரையும் அவர் சட்டத்தரணி தொழில் செய்துவந்தார். 1962இல் இருந்து 1985 வரை மகராஷ்ட மாநில அரசில் பல தடவைகள் பிரதீபா மந்திரி பதவிகள் வகித்து வந்தார். அதன் பின்னர் இராஜஸ்தான் மாநில ஆளுநராக பதவி வகித்தார்.

பிரதீபாவை எதிர்த்து போட்டியிட்ட மற்றைய முக்கிய வேட்பாளர் 84 வயது பகைரன் சிங் (Bhairon Singh Shekhawat). பிரதீபா 66 வீத வாக்குகளை பெற்று பகைரன் சிங்கை தோற்கடித்து ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். பகைரன் சிங் ஐ பாரதீய ஜனதா கட்சி ஜனாதிபதி வேட்பாளராக நியமித்தது. பகைரன் சிங் பிரதீபா பட்டீலின் நெருங்கிய உறவினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் 13வது ஜனாதிபதியாக யூலை மாதம் 21ஆம் திகதி பதவியேற்ற பிரதீபா பட்டீலுக்கு இரண்டு பிள்ளைகள்.

இந்திய தேசிய மட்டத்தில் பிரதீபா பிரபல்யம் அடைந்திராவிட்டாலும் அவர் பதவி வகித்த மாநிலங்களில் மிகவும் மதிக்கப்பட்டவர். இவர் மாநில மக்களுக்கு செய்த உதவியால் இவரது பிறந்த ஊரான பம்பீரி (Bhamburi) இல் உள்ள எல்லா மக்களாலும் தெய்வத்திற்கு அடுத்த படியாக மதிக்கப்படுகிறார்.

பிரதீபா ஜனாதிபதியாக பதவியேற்றதில் பெருமைப்பட்டுக் கொள்ளும் பிரதீபாவின்




தகப்பனார் பஹாட்னி (Phadnis), தான் தங்கள் அக்கால சமுதாய வழக்கத்திற்கு மாறாக பிரதீபாவை பாடசாலைக்கு அனுப்பி கல்வி கற்பித்தேன் என்றார்.

பிரதீபா மாநில மந்திரி பதவி வகிக்கும் போது இந்திரா காந்தியின் மிகவும் நம்பிக்கைக்கு உரியவராக இருந்தார். 1970 இல் நடைபெற்ற ஜலகன் (Jalgaon) கலவரத்தை அடக்குவதற்கு இந்திராகாந்தி முற்றுமுழுதாக பிரதீபாவை நம்பியிருந்ததாக இந்திரா காந்தி ஒருமுறை கூறியிருந்தார்.

இந்தியாவின் எதிர்கட்சி உறுப்பினர்கள் சிலரும் சில பத்திரிகைகளும் பிரதீபாவிற்கு தேசியரீதியில் அரசியலில் இருக்கும் ஒரே ஒரு தகுதி இவர் நேரு குடும்பத்தின் அதீத விசுவாசி என்பதே ஆகும் என்கிறார்கள்.

"பெண்கள் முகத்தை மூடி (Headscarves) துணியை போடுவதை தவிர்க்க வேண்டும். இப்பழக்கம் 16ஆம் நூற்றாண்டில் இந்தியாவை கைப்பற்ற வந்த இஸ்லாமிய வர்த்தகர்களிடம் இருந்து தம்மைப் பாதுகாக்க ஏற்படுத்தப்பட்டது. இப்போது இது தேவையில்லை." இவ்வாறு பிரதீபா முன்பு ஒருமுறை கூறியவர் எனவும் இவரை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்தது தவறு எனவும் பல இஸ்லாமிய மக்கள் குறை கூறியிருந்தார்கள்.

கடந்த ஐந்தாண்டு காலம் ஜனாதிபதியாக பதவி வகித்து விலகும் இந்தியாவின் "மக்கள் ஜனாதிபதி" என அழைக்கப்படும் விஞ்ஞானி அப்துல்கலாமின் இடத்தை பிரதீபாவால் எப்படி நிரப்பமுடியும் என்பதை பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும்.


தொடர்ச்சி 03ஆம் பக்கம்



விளம்பரம்

VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



**Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada**

TEL: 416-282-8059 FAX: 416-282-4978

e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



**HOME INSPECTION**

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

**ந. தயாபரன்**

Certified Inspection Specialist

***Expert Building Inspections LTD.***

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - **1.866.373.3315 416.727.8336**

# நீண்டநாள் வாழ - நினைத்ததை அடைய

முதுமையின் நிழல் எல்லோர் வாழ்விலும் ஏற்படுவது தவிர்க்க முடியாதது தான். இருந்தாலும் இதை யாரும் விரும்புவதில்லை. வயது முதிர்வினால் அதை சார்ந்த நோய்களான இரத்தக் கொதிப்பு, இருதய நோய்கள் மற்றும் மூட்டுவலிகள் போன்ற நோய்களும் அவர்களை அணுகத் தொடங்கிவிடும். மக்களின் நோக்க மெல்லாம் முதுமையானாலும் முதுமையின் காரணமாக நோய்கள் தம்மை அணுகாமல் நீண்ட நாட்கள் வாழ வேண்டும் என்பது தான்.

யாரும் முதுமையை வரவேற்பதில்லை. சோம்பேறிகள் மட்டும் முதுமைப்பருவம் வந்ததும் தமக்கு கஷ்டப்பட வேண்டிய காலம் வந்து விட்டதாக எண்ணுகின்றனர். முதுமைக் காலத்தில் ஆரோக்கியத்துட னும் சுறுசுறுப்புடனும் இருப்பதற்கு பல வழிகள் உண்டு. குடும்ப பாரம் குறைவடைவது, உணவுப் பழக்க வழக்கங்கங்கள் மற்றும் வாழ்க்கை முறைகள், சமவெளிப் பிரத்தியேகங்களில் வசிப்பவர்களை விட மலைப்பகுதிகளில் வசிப்பவர்கள் நீண்ட நாள் வாழ்கின்றனர்.

## நீண்ட ஆயுளுக்கு மெதுவாகச் சுவாசித்தல்

மூச்சுப் பயிற்சி (Breathing Technique) என்னும் பிராணயாமத்தில் பிராணசக்தியின் அளப்பெரிய சக்தியை நமது உடலுக்கும் உயிருக்கும் எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பதனையும் அதனைக் கொண்டு அழியாத தேசத்தையும் இணையற்ற பிரபஞ்ச சக்தியின் ஆற்றலையும் நாம் பெறும் வழி வகைகளையும் நமது பண்டைக்கால முனிவர்களான திருமூலர், பதஞ்சலி முனிவர் போன்ற மகான்கள் நமக்களித்தவற்றை நாம்முறைப்படி சிறிதளவேனும் தெரிந்து கொண்டு இப்பிராணாயாம என்ற சுவாசத்தைக் கட்டுப்படுத்துதல் அல்லது வாழ்வை நீடித்தல் என்று பொருள். இதனால் உடலின் உள்பலத்தை (Internal Energy) பராமரிக்கவும் உடலிலுள்ள நரம்பு மண்டலங்களை உறுதிப்படுத்தவும் ஒரு வழிமுறையாகும். பிராணாயாமத்தினால் நமது இருதயதுடிப்பு எண்ணிக்கையும் சுவாசத்தின் எண்ணிக்கையும் குறைகிறது. இது மனிதனின் தோல் மற்றும் உடலின் உஷ்ணத்தை அதிகரிக்கச் செய்து தேவையான அளவு பலத்தைக் கொடுக்கிறது. ஆயுளையும் அதிகரிக்க வைக்கிறது. பிராணாயாமம் மன உளைச்சலை (Tension) நீக்கி மன அமைதியைக்கொடுக்கிறது. அத்துடன் உடலாலும் மனதாலும் ஏற்படுகின்ற பலதரப்பட்ட நோய்களுக்குத் தீர்வாக அமைகிறது.

பிராணாயாமப் பயிற்சியினால் (Breathing Exercise) உடலில் அதிக சக்தியை உற்பத்தி செய்யும் உறுப்புகளிலிருந்து குறைந்த உற்பத்தி செய்யும் உறுப்புகளுக்கு சக்தியை வழங்கக்கூடிய நிலை உண்டாகின்றது. இதனால் உடல் முழுவதற்கும் புதுப் பொலிவு கிடைக்கின்றது. அதுமட்டுமன்றி பிராணாயாமம் என்னும் மூச்சுப்பயிற்சி முறைகளால் உண்டாகும் பிராண சக்தியானது உடலின் ஐந்து இராஜ உறுப்புக்களான மூளை, இருதயம், சுவாசப்பைகள், ஈரல், சிறுநீரகங்கள் (Kidney) என்பனவற்றுக்கு தேவைக்கேற்ப வழங்குகின்றது.



மெதுவாகவும் ஆழமாகவும் சுவாசித்தலினால் மனிதனின் ஆயுள் அதிகரிக்கிறது என்பதனை அறிகிறோம். இது யோகாசனத்தில் மறைந்து கிடக்கும் இரகசியம். மெதுவாக சுவாசிப்பதால் ஒருவன் தனது இளமைப் பருவத்தை நீடிக்கின்றான். பொதுவாக ஒரு மனிதனின் 16 தடவைகளும், 24 மணி நேரத்தில் 21 - 600 தடவைகளும் சுவாசிக்கிறான். உதாரணமாக ஆண்டவனால் நமக்கு கொடுக்கப்பட்ட வயது 100 என்றால் அதனை வருட எண்ணிக்கையில் கணக்கிடுவதாகாது. அது சுவாசத்தின் எண்ணிக்கையைக் கொண்டே கணக்கிடப்படுகிறது. ஒரு மனிதனின் சுவாசம் நிமிடத்திற்கு 15 தடவைக்குப் பதிலாக 30 தடவையாக அதிகரித்துவிட்டால் அவனது ஆயுள் 50 ஆண்டுகளாகக் குறைந்து விடுகிறது. ஆனால் அவனது சுவாச எண்ணிக்கை நிமிடத்திற்கு 7 1/2 தடவையாக குறைந்து விட்டால் அவனது ஆயுள் 200 ஆண்டுகளாக அதிகரிக்கிறது என்பதாகும். எல்லா மனிதர்களிடமும் சுவாச எண்ணிக்கை ஒரே சீராக இருக்காது. அதற்கேற்றவாறுதான் அவர்களின் வாழும் காலமும் வேறுபடும். அதேபோல மிருகங்களின் வாழ்நாளும் அவற்றின் சுவாச எண்ணிக்கைக்கேற்ப மாறுபடுகிறது.

நாய் நிமிடத்திற்கு 50 தடைவகள் சுவாசித்து 14 வயது வாழ்கிறது. யானை நிமிடத்திற்கு 20 தடவை சுவாசித்து 100 ஆண்டுகள் வாழ்கிறது. ஆமை நிமிடத்திற்கு இரண்டு தடவை சுவாசித்து 400 ஆண்டுகள் வாழ்கிறது. மனிதன் நிமிடத்திற்கு 15 தடவை சுவாசித்து 120 ஆண்டுகள் வாழ்கிறான். இது இயற்கை. ஆனால் இன்றைய மனிதரில் பெரும்பாலானோர் தமது தவறானா வாழ்க்கை முறையினாலும், தவறான உணவுப் பழக்கத்தினாலும் ஒழுங்கான யோகாசனப் பிராணாயாமம், தியானப்பயிற்சி செய்யத் தவறுவதாலும், எதிர்மறையான பக்கவிளைவுகளைத் தரும் மருந்து மாத்திரைகளை உட்கொள்வதாலும் தமது சுவாசத்தை சீரற்றதாக்கி தமது ஆயுள் காலத்தைக் குறைத்துக் கொள்கின்றனர்.






416.289.2033 after 7:00pm

# இந்தியாவின் முதலாவது பெண்...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

அப்துல்கலாம் 340 அறைகள் கொண்ட ஜனாதிபதி மாளிகையை இந்திய பொதுமக்களுக்காக திறந்து விட்டவர் என்ற பெருமைக்குரியவர். அப்துல்கலாமை புகழும் BBC செய்தி நிறுவனம் அவர் ஒரு அரசியல்வாதியாக இல்லாமல் இருந்ததே அவரை எல்லாமக்களும் விரும்புவதற்கான முதல் காரணம் என்கிறது. இந்தியாவின் எல்லாமக்களாலும் மிகவும் விரும்பப்பட்டவரும், ஒலியிலும் வேகமான விமானங்களை (Supersonic fighter jet) செலுத்தியவரும் (அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக்கப்பல்களை (Nuclear Submarine) செலுத்தியவரும் தனது வாழ்நாளையே நாட்டிற்காக அர்ப்பணித்தவருமான அப்துல்கலாமை ஒருவராலும் மறக்கமுடியாது. (There is little doubt he will be missed) என்பது திண்ணம் என BBC அடித்துக் கூறுகிறது.

தனது ஜனாதிபதி பதவியை இந்தியாவின் வழக்கத்திற்கு ஏற்ப ஒருமுறையுடன் யூலை 24ஆம் திகதி நிறைவு செய்த அப்துல்கலாம் மறுநாள் ஒரு சாதாரண மனிதனாக பாதுகாவலர் எவரும் இல்லாமல் தனியாக தனக்குப் பிடித்த சென்னையில் அண்ணாசாலையில் உள்ள அன்னலட்சுமி உணவகத்திற்கு சென்று தனக்கு பிடித்த உணவை அருந்தினார்.



அப்துல்கலாம் தனது ஐந்து வருட பதவிக்காலத்தில் பதினைந்து இலட்சம் குழந்தைகளை சந்தித்துள்ளார். இவர் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிய பின்னர் இந்தியாவிலுள்ள நாலு பல்கலைக்கழகங்களில் பகுதி நேர பேராசிரியராகவும், திருவனந்தபுரத்திலுள்ள விண்வெளி ஆராய்சிமையத்திலும் பணிபுரிய இருக்கிறார்.

# வீட்டுச் சிறைகளில் கிழக்குத்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

அங்கு இந்தியாவின் அனல் மின்சார நிலையம் அமைக்கப்படவுள்ளது. அதை பார்வையிடவும் ஆராயவும் இந்திய மின்சாரத்துறை அமைச்சர் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு வருகின்றது. இந்த மின்சார நிலையம் அமைப்பதோடு அந்தப் பகுதியில் மிக பாதுகாப்பாக சிங்களக் குடியேற்றம் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இது மட்டுமல்ல தொடர்ந்து பல சிங்கள குடியேற்றங்களை எவ்வாறு செயல்படுத்தலாம் என்று மகிந்தாவின் அரசு திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் மட்டக்களப்பு இலுப்படி சேனை சந்தியில் தமிழில் இருந்த வீதிப்பெயரை சிங்களத்தில் மாற்றம் செய்து அதன் பெயர் பலகையை மகிந்தவின் சகோதரர் கோத்தபாய ராஜபக்ச திறந்து வைத்து சிங்கள குடியேற்றம் நடைபெறும் என்று பகிரங்கமாக பச்சைக் கொடி காட்டியுள்ளார்.

புலிகளிடம் இருந்து கிழக்கை மீட்டதும் கிழக்கு மாகாணத்தமிழர்கள் விடுதலை அடைந்து விடுவார்கள். அவர்களுக்கு கௌரவமானதும், நீதியானதுமான ஓர் அரசியல் தீர்வு கிடைத்துவிடும் என்று கற்பனை செய்தவர்கள் மண்ணைக் கவ்விய பின்னரும் தமது மீசையில் மண்படவில்லை என்றே கூறிவருகின்றனர்.

"முன் எப்போதும் இல்லாதவகையில் நமது கிழக்குத் தமிழ் மண் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு விற்கப்படுவது தொடங்கி விட்டது. இதை கிழக்குத் தமிழர்களும், முஸ்லீம்களும் ஒருபோதும் அங்கீகரிக்க மாட்டார்கள். முன் எப்போதும் இல்லாதவகையில் மிகப்பெரிய போராட்டத்துக்கு அவர்கள் சுயமாக எழுவது நிச்சயம். இது இலங்கை அரசு விதைத்த வினை" என்று அரசியல் விமர்சகர் ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார்.


# APPLEMORE AUTOMOTIVE

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# யோக அறிவியலும் தியானமும்

இந்த உலகம் எப்பொழுதும் மிகவும் சிறந்த இடமாகத்தான் இருந்திருக்கிறது. இந்த உலகத்தைப் பற்றியோ, மற்ற கிரகங்களைப் பற்றியோ நமக்குத் தெரிந்தவகையில் மற்ற எல்லா கிரகங்களைக் காட்டிலும் இவ்வுலகமே மிகச்சிறந்த இடமாக இருக்கிறது. பேராசை கொண்டு இந்த முட்டாள்கள்தான் சிறிதும் விழிப்புணர்வில்லாமல், மனித குலத்திற்கு நன்மை பயக்கும் என்று எண்ணிக்கொண்டு மற்ற அனைத்து உயிர்களையும் கொன்று குவித்துக் கொண்டேயிருந்தார்கள். ஆனாலும், அந்த மனிதகுல நன்மை என்பது இன்றளவும் ஒரு கனவாகவே இருக்கிறது. ஆயிரக்கணக்கான ஆண்டு கால நாகரி கத்திற்குப் பிறகும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மற்ற உயிர்களைப் படுகொலை செய்தபிறகும், பல சமயங்களில் நடந்த மனிதப் படுகொலைகளுக்குப் பிறகும் மனிதகுல நன்மை என்பது இன்னமும் தொலைதூரத்திலேயே உள்ளது.


*ஈஷா யோக மையம் - வெள்ளியங்கிரி*

*மலைச்சாரல், கோயம்புத்தூர்*

*E-mail: yogacenter@ishafoundation.org*

*website: www.ishafoundation.org or*

*www.ishayoga.org*

தொடர்புகளுக்கு: 416.699.0951


மனிதன் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சுபிட்சமாக இருந்த அளவுக்கு இப்பொழுது இல்லை. எல்லாம் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மூலம் நம் வெளிப்புறச் சூழ்நிலையை மிக அதிகமாக மாற்றியிருக்கிறோம். இருந்தும் மனிதகுல நன்மை அல்லது சுபிட்சத்தின் அருகில் நாம் இல்லை.

ஆகவே, நமக்குள் பார்த்து மனிதகுல நன்மைக்கு என்ன செய்ய வேண்டும் என கண்டுகொள்ள கட்டாயமாக இதுவே சரியான நேரம். உங்கள் உள்தன்மை மாறினால்தான் உண்மையான நலம் ஏற்படும் என்பதை உங்கள் வாழ்க்கை அனுபவத்திலிருந்து நீங்கள் உணரமுடியும். தற்பொழுது உங்கள் வாழ்க்கையின் தரத்தை, நீங்கள் அணியும் உடையோ, உங்களின் கல்வித் தகுதியோ அல்லது உங்கள் குடும்பப் பின்னணியோ, வங்கிக் கையிருப்போ நிர்ணயிப்பதில்லை. இந்தக் கணத்தில் நீங்கள் உங்களுக்குள் எந்த அளவு அமைதியாகவும், ஆனந்தமாகவும் இருக்கிறீர்களோ, அது மட்டும்தான் உங்கள் வாழ்க்கையின் தரத்தை நிர்ணயிக்கிறது.

ஆகவே, யோகாவும், தியானமும் உங்கள் உள்தன்மையைக் கையாளுகிற அறிவியலின் ஒரு பரிமாணம் ஆகும். இங்கு நீங்கள் வாழ்க்கையை அமைதியாகவும், ஆனந்தமாகவும் வாழ்வதற்குரிய சரியான உட்புறச் சூழ்நிலையை உருவாக்குவதே அதன் முக்கிய நோக்கம் அல்லது வேறுவிதமாகச் சொன்னால், நீங்கள் மிகவும் நன்றாக வாழமுடியும். நீங்கள் அன்பாகவும், ஆனந்தமாகவும் மாறிவிட்டால் சுபிட்சமடைந்துவிட்டதாக கருதுவீர்களா? ஆகவே, யோகா மற்றும் தியானம், யோகா மற்றும் தியானம் என்று சொல்வது சரியல்ல. யோகா என எதைச் சொல்கிறீர்களோ அதில் தியானமும் அடங்கியுள்ளது. முன்பு எப்போதும் இருந்ததைவிட இந்தக் காலகட்டத்தில் யோகா அதிகமான முக்கியத்துவம் பெறுகிறது. இதற்கு முந்தைய காலத்தில் முக்கியமான இல்லை என நான் கூறவில்லை. ஏன் இதைக் கூறுகிறேனென்றால், இன்று உலகில் பல செயல்கள் செய்வதற்கு சக்திவாய்ந்த கருவிகளைக் கொண்டுள்ளோம். நவீன தொழில் நுட்பத்தின் உதவியால் நீங்கள் விரும்பினால் மலையைக்கூட நாளையே தரைமட்டமாக்க முடியும். இந்த மாதிரியான ஒரு சக்தி நம் கையில் இருக்கும்பொழுது உள்நிலை புத்திசாலித்தனமும், வாழ்க்கையைப் பற்றிய விழிப்புணர்வும் மற்ற உயிரினங்களை நமக்குள் ஒரு பாகமாக உணர்கிற தன்மையும் நமக்கு இருப்பது மிகமிக அவசியமாகிறது. இல்லையெனில் உங்களுக்கே நீங்கள் மிகப்பெரிய சேதத்தை விளைவித்துக் கொள்வீர்கள். அந்த மாதிரியான ஒரு சேதத்தில்தான் இப்பொழுதும் இருக்கிறீர்கள்.

சுவாசிப்பதே பிரச்சினையாகும் அளவிற்கு நீங்கள் சேதத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். இங்கு இந்த உலகத்தில் உயிர்வாழ்வதே பிரச்சினையாகிக் கொண்டு வருகிறது. வெளிப்புற அறிவியலை செயல்படுத்தியதால் மட்டுமே இந்த மாதிரி நடந்திருக்கிறது. சரியான உள்சூழ்நிலையை உருவாக்கக்கூடிய உள்நிலை அறிவியலை நீங்கள் கவனிக்கவேயில்லை. ஆகவே நீங்கள் சக்திவாய்ந்தவர்களாக இருப்பதால் யோக அறிவியல்தான் முன்பு எப்போதையும்விட இக்காலகட்டத்திற்கு மிகவும் தேவையாக இருக்கிறது. நீங்கள் சக்தியுடன் இருப்பதால், நீங்கள் புத்திசாலித்தனமாக இருப்பது மிகவும் முக்கியமாகிறது. இது எனக்கு இக்கிரகத்தில் வாழ்ந்த மிகவும் சக்திவாய்ந்த மனிதர்களைப்பற்றி நினைவூட்டுகிறது. சர்வாதிகாரிகள் எல்லாம் அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவர்கள் நாட்டில் மிகவும் சக்திவாய்ந்தவர்களாகத் திகழ்ந்தார்கள். ஒருநாள், முசோலினி அனைத்து இத்தாலிய புகைவண்டிகளையும் குறித்த நேரத்தில் ஓடும்படி செய்தார். ஒரு சில புகைவண்டி ஓட்டுநர்களைச் சுட்டத்தின் மூலம் இதை அவர் நடத்திக் காட்டினார். இத்தாலியில் அனைத்து புகைவண்டிகளும் குறித்த நேரத்தில் ஓடத் துவங்கின. அவர்கள் வரலாற்றில் இது போல இதற்கு முன்பு நடந்ததேயில்லை. ஆனால் அவர் உருவம் பொறித்த தபால் தலை வெளியிட்டபொழுது ஒரு புதுபிரச்சினை உருவானது. தபால் தலைகளெல்லாம் அஞ்சல் உறையின் மீது இல்லாமல் கீழே விழுவதும், தபால் பைகளில் சேர்வதுமாக நடந்தது. இது முசோலினியின் கவனத்துக்கு வந்த பொழுது தபால்துறைத் தலைவரை அனைத்து அதற்குரிய காரணத்தைக் கேட்டார். நீங்கள் ஏன் உயர்ந்த ரக பசையை உபயோகிப்பதில்லை எனக் கேட்டார். அதற்கு தபால் துறைத் தலைவர் மிகுந்த பயத்துடனும், தயக்கத்துடனும் உயர்ந்த ரக பசையைத்தான் உபயோகிக்கிறோம். ஆனால் தபால்தலையின் முன்பக்கத்தில்தான் மக்கள் எச்சிலைத் துப்புகிறார்கள். அதனால்தான் தபால் தலைகளெல்லாம் சரியாக ஒட்டுவதில்லை என்று கூறினார்.



**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

ஆகவே, நீங்கள் சரியான திசையில் செல்ல இதுவே தருணம். நவீன விஞ்ஞானம் உங்களுக்களித்திருக்கும் வசதிகளைப் பயன்படுத்தியே உண்மையான மனிதகுல நன்மையை அடைவதற்கேதுவான பரிமாணத்தை யோக அறிவியல் உங்களுக்குள் திறக்கச்செய்யும்.


**MALVERN MONTESSORI SCHOOL**

**10 Sewells Road, Scarborough (Sewells/Neilson)**

*"Preparing your children for new experiences, challenges, and making them feel connected to a caring community"*

**PRE- SCHOOL AND ELEMENTARY**
**(AGES 3 TO 9 YEARS)**

**2007 - 2008 REGISTRATION CURRENTLY IN PROGRESS...**

- LOW STUDENT –TEACHER RATIO
- PRE-SCHOOL & ELEMENTARY (AGES 3 TO 9 YEARS)
- PHONETIC APPROACH TO READING AND WRITING
- HISTORY, GEOGRAPHY AND SCIENCE
- FRENCH INTRODUCTION
- MUSIC AND ART CLASSES
- BRIGHT SPACIOUS CLASSROOMS
- EXCITING SUMMER SCHOOL (JULY & AUGUST)
- MONTESSORI ELEMENTARY PROGRAMME (GRADES 1 – 4)
- OFFERING HIGH QUALITY PRE-SCHOOL AND ELEMENTARY EDUCATION



**FOR ENROLLMENT CALL (416) 724-8900**
**(LIMITED SPACES FOR GR. 1 - 4)**





**வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.**

*பரம்ஜி* - **416.230.1107**

**PARAM GNANASWARAN**
Broker
**HOME LIFE GTA REALTY INC.** Brokerage*
Office East: 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
**416.321.6969**
Office West: 145 Traders Blvd., Suite 28, Mississuga, ON
**905.712.2666**
paramg@gmail.com

HOMELIFE HIGHER STANDARDS

* INDEPENDENTLY OWNED AND OPERATED

# தந்தையும் தனயனும்

எல்லா சிறுவர்களுக்கும், தந்தையின் பாதுகாப்பான வழிகாட்டல் அத்தியாவசியம் என்ற உண்மையை இன்று உணர்கிறேன்.

ஒரு சிறுவன் தகப்பன் இல்லாமல் வளரும்போது அவனுக்குத் தேவைப்படும் வழிகாட்டல், ஆன்மீகம் பற்றிய விளக்கம் போன்ற பலவற்றைப் பற்றிய புரிந்துணர்வு கிடைக்க வழியில்லாமல் போகலாம். தைரியம், கோழைத்தனம், கடுமை, மென்மை, பேச்சு, மௌனம், முன்னேறுவது எப்போ, பின்தங்குவது எப்போ, மற்றவர்களுடன் மதிப்பாகப் பழகுவது போன்றவற்றை எல்லாம் சரிவரச் செயற்படுத்துவது தகப்பனில்லாத தனயனுக்குச் சரிவரத் தெரியாமற் போகலாம்.

தந்தையில்லாத சிறுவர்கள், தமது அப்பா தமக்குக் கற்பிக்காமல் விட்ட, கற்பிக்க முடியாமற் போன விடயங்களைப் பற்றி யோசித்துக் குழம்புவர். சில விடயங்களைத் தாமே சரிபிழை பார்த்து அவர்கள் செய்யலாம். ஆனால் தமக்குள்ளே தம்மைப்பற்றிய தம் அபிப்பிராயத்தை நிச்சயப்படுத்திக் கொள்ள முடியாமல் சில சமயங்களில் துன்பப்படுவர். தமது வளர்ச்சியைப் பற்றித் திருப்திப்படாது அவர்கள் தமக்குள்ளேயே மௌனமாக விசனப்படுவர். நிபந்தனையில்லாத பேரன்புடன் தம்மை உயிருக்குயிராக நேசிக்கும் தெய்வீகத் தந்தை ஒருவர் தமக்கு இருப்பதைப் பல சிறுவர்கள் உணர்வதில்லை. முற்றுமுழுதாக தம்மை அறிந்து நேசித்து எப்பொழுதும் தமக்குள்ளும் தம்மைச் சூழவும் நிறைந்து தம்மை வழிநடத்தும் அந்தத் தெய்வீகப்பிதாவாகிய இறைவனின் அருளைப்பற்றிய விழிப்புணர்வு பல சிறுவர்களுக்கு ஏற்படுவதில்லை. தமக்கு அத்தியாவசியமான உளவளத்துறை, ஆலோசனை, வழிகாட்டல் யாவற்றையும்



தமக்களிக்கும் இறைவன் எனும் அருட்தந்தை தமது மையமாம் நெஞ்சத்தில் மனச்சாட்சியாய் உறைந்திருப்பதை அவர்கள் புரிந்து கொள்வதில்லை. அத்தியாவசியமான சகலதும், தேவையான நேரம் வரும்போது அவர்களுக்கு கிடைத்திடவே, ஆன்மீகத் தந்தையாம் ஆண்டவன் இந்த உதவியை ஏற்படுத்தியிருக்கிறார். சகல சிறுவர்களும் ஆன்மீகம் மிகுந்த நற்குணவான்களாக வளர உதவிடவே இந்த இறைவன் ஏற்பாடு.

உனக்கு மானிடத் தந்தை இல்லையே என இதுவரை நீ துக்கப்பட்டிருக்கலாம். அப்பாவின் அரவணைபிற்கு ஆசைப்பட்டிருக்கலாம். உனது இருதயவாசியாம், உனது ஆன்மீகத் தந்தையுடன் பேசி, உனது சிந்தனைகளையும் தேவைகளையும் இன்று பரிமாறிக்கொள்.

இன்று எனது உண்மைத் தந்தையாம் இறைவனுடன் நேரம் செலவழித்து நன்றியுடன் அவரைப் போற்றித்துதித்து மனச்சாந்தியும் இன்பமும் அடைகிறேன். ஒரு சிறுமி, பருவமங்கையாக வளர்ந்திட, தாயுடன் தந்தையின் உதவியும் அத்தியாவசியம் என்பதை உணர்ந்து அதை ஒப்புக்கொள்கிறேன்.

அவனின் அன்பு தனக்கு வேண்டுமென உணர்த்தி ஒரு சிறுமியைப் பாசத்துடன் அரவணைத்து வளர்ந்திட ஒரு பலமுள்ள தந்தை அவனுக்குக் கட்டாயம் வேண்டும். அவர்களுடன் பேச, அவர்கள் சொல்வதை உன்னிப்பாக கேட்க, அவர்களுக்காகக் குரல் கொடுக்க, தமக்காக குரல் எழுப்ப அவர்களுக்குப் பழக்க, நிச்சயம் சிறுமிகளுக்கு ஒரு அப்பா அவசியம். தங்களைக் கண்டித்து வழிநடத்த தாங்கள் நம்பிக்கை வைக்க, தெரியாதவற்றைக் கற்றுக் கொடுக்க, தாங்களே தீர்மானங்கள் எடுக்க சிறுமிகளுக்கு கட்டாயம் பிதா இருக்க வேண்டும். நீ அழகு, நீ விலைமதிப்பற்ற உயர்ந்த பொக்கிஷம், என்று அவர்களை மரியாதையுடன் வளர்க்க ஒரு தந்தை அத்தியாவசியம். ஆண்களிடமிருந்து எதை எதை எதிர்பார்க்கலாம் என்பதைச் சிறுமிகளுக்குத் தந்தை தான கற்றுக் கொடுக்கலாம்.

ஆனால் சிறுமிகளுக்குத் தேவையானவற்றை அவர்களுக்கு எப்படிக் கொடுப்பதென்பது துரதிஷ்டவசமாகச் சில தந்தைகளுக்குத் தெரியாமல் போய் விடுகின்றது. தமது கடமையைச் செய்ய விருப்பமிருந்து, சிறுமியின் ஆசை அபிலாசைகளை நிறைவேற்ற எவ்வளவோ முயன்றாலும், சில அப்பாக்களினால் தம் புதல்வி, தாம் என்ன தர வேண்டுமென்று விரும்புகிறாள் என்பதைப் புரிந்துகொள்ள முடியாமற் போகின்றது. ஆகவே தாம் விரும்பிய மாதிரியான அப்பா தமக்குக் கிடைக்கவில்லையே, அவரை எப்படிக் கண்டுபிடிப்பது என்ற தேடலுடனேயே வளர்கின்றார்கள். தமது தந்தை தமக்குத் தரவேண்டியவை எனத் தாம் விரும்பியவற்றை அவர் கொடுக்காதபடியால் விசனத்துடன் துக்கத்துடன் பயத்துடன் சிலவேளை கோபத்துடன் வளர்வாள்.

ஒவ்வொரு சிறுமியின் சகல தேவைகளையும் நன்கறிந்து, அவளை முற்றுமுழுதாய் விளங்கி, நிபந்தனையில்லா பேரன்புடன் அவளை நேசிக்கும் தெய்வீகத்தந்தை ஒருவர் நிச்சயமாக அவளுக்கு இருக்கிறார். தனது மானிட மகளைப் பாதுகாத்து, அவள் சொல்வதைச் செவிமடுத்து, அவளுக்காக வாதாடி அவளைச் செம்மையாக வளர்கிறார். இத்தெய்வீகத் தந்தை இந்த உலகிற்கும், தமக்கும் விலைமதிப்பில்லாத பொக்கிஷங்களாய் விளங்கும் இச்சிறுமிகளை எப்படிப் பாதுகாத்துப் போஷித்து வளர்ப்பதென்பது அவருக்குக் கைவந்த கலை!

உனது மானிடத் தந்தையுடன் நல்லதோர் உறவு உனக்கு வாய்க்கவில்லையே என இன்றுவரை நீ வருந்திருக்கலாம். உனது தெய்வீகத் தந்தையுடன் உனது நேரத்தையும் சிந்தனைகளையும் விசுவாசத்துடன் பரிமாறிக்கொள். உனது மானிடத்தந்தையில் நீ கண்ட குறைபாடுகளை இது நிச்சயம் நீக்கி விடும். எனது உண்மையான தந்தையுடன் நேரம் செலவழிப்பதில் இன்று ஈடுபடுகிறேன்.

**ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 106**

*மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214*



**லலிதா புரூடி**

---

# பக்தி

பக்தி என்றால் நம்பிக்கை எனலாம். நம்பு என்பதன் பகுதியடிகாகப் பிறந்த சொல் நம்பிக்கை. நம்புதல் என்றால் விரும்புதல் என்று பொருள். எனவே விரும்பி நாம் கொள்கின்ற ஒன்றுதான் நம்பிக்கை. விருப்புடன் எதை நாம் ஏற்றுக்கொள்கிறோமோ அதற்குப் பெயர் நம்பிக்கை. நாம் எத்தனையோ பொருட்களில் நம்பிக்கை வைக்கின்றோம். சிறப்புக் கருதி கடவுள் மீது கொள்ளும் நம்பிக்கை தான் நம்பிக்கை என்றாகின்றது. நம்பன் என்பது கடவுளின் பெயர்களில் ஒன்று.



கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதால் நம்பிக்கை வைக்கத்தக்க உறுதிப் பொருள் கடவுள் எனலாம். எல்லாவற்றையும் கடந்தும் எல்லாவற்றிலும் கலந்தும் நிற்பவர் கடவுள் என்பதால் கடவுளின் மீது நம்பிக்கை கொள்வதால் நாம் ஈடேற்றம் அடையலாம். முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாகவும் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனாகவும் விளங்கும் பேரருட் சக்தியான இறைவனிடம் இறுக்கமான நம்பிக்கை கொள்வதனால் நாம் எல்லையில்லாப் பேரானந்தம் அடைகின்றோம்.

உலகில் எல்லாமே சரியாகத்தான் இருக்கின்றன என்கின்ற நம்பிக்கையும் படைப்பில் ஒழுங்கீனமோ, பாரபட்சமோ பிசகோ இல்லை என்ற எண்ணமும் அதில் நாம் ஒருபகுதி என்று தெளிந்து இந்த அமைப்பில் நமக்குரிய இடத்தில் பொருந்தி அமைத்து இருப்பது தான் பக்தியாகும்.

உண்மையில் இந்தப் பெரும்படைப்பை புரிந்து கொள்ள முயன்று அதில் வியப்புமீதூர நாம் உணரும் ஒவ்வொரு உண்மையும் நமது நம்பிக்கைக்கு ஆதாரமாகும். இது தான் பக்தி. இங்கே ஏதோ சரியில்லை போல சிற்சில சமயம் ஒருமயக்கம் உண்டாகி அதைச் சரிப்பண்ண நாம் முற்படும் போது நம்மிடம் அவநம்பிக்கை வேர்கொள்ளத் தொடங்கிவிடும். அதாவது நம்மிடம் பக்தி குன்றி விடுகின்றது.

உலகில் வந்து பிறக்கும் ஒவ்வொரு பிள்ளையும் தனக்குரிய வாழ்க்கையை தானே கண்டுபிடித்து விடுகின்றான். எந்தத் திருத்தத்தையும் சமூகம் ஏற்றுக்கொண்டு நிலைத்து விட்டிருந்தால் புதிய துயரங்களும் புதிய சீர்திருத்தங்களும் தோன்றியிருக்குமா? விடயம் என்னவென்றால் படைப்பின் பான்மையில் யாவும் ஓர் ஒழுங்கில் வளர்ந்து தாழ்ந்து மாறிப் புதுமை பெற்றுக் கொண்டேயிருக்கின்றன. உலகில் வாழும் மனிதனுடைய மனப்பாங்கில் தான் துயரங்களும் குறைகளும் காணப்படுகின்றன.

இந்த உண்மையை உணர்ந்து கொள்ளும் போதுதான் அந்த உள்ளம் துயரத்தை வெல்கின்றது. துயரத்தில் ஆழ்ந்து கிடக்கும் எண்ணற்ற உயிர்களின் பால் இரங்குகின்றது. துயரங்களிலிருந்து விடுதலை ஒவ்வொரு உயிர்க்கும் அவ்வுயிரிலேயே இருக்கின்ற இரகசியம் விளங்குகின்றது. அப்பொழுதே அழிவற்ற ஒளிமிக்க புன்னகை பிறக்கின்றது. ஒன்றை ஆம் என்று ஒப்புக் கொள்வது மட்டும் நம்பிக்கையல்ல. அதை உணர்ந்து ஏற்று அவ்வுணர்வில் பரவசப்பட்டு நிற்பதும் நம்பிக்கை. அதுதான் பக்தி அந்தப் பரவசம் தான்பக்தி. அதாவது நான் என்ற தனிமையிலிருந்து விடுபட்டு உயிர் என்ற பொதுமையிற்பட்டு அதாவது பரத்தின் பாற்பட்டு நிற்பது அது பரவசம் தானே. பக்தி வடசொல். நம்பிக்கை தமிழ்சொல்.

**நா.க.சிவராமலிங்கம்**

பக்தியினால் சித்தம் தெளியும். செய்கை அனைத்திலும் செம்மை பிறந்திடும் தலைகோபுரம் போல் நிமிர்ந்து நிலைபெறும் என்று கூறிய பாரதியார் நம்பினார் கெடுவதில்லை, நான்கு மறைத்தீர்ப்பு என்று கூறியுள்ளார். பக்தி உடையார் காரியத்திற் பதறார் என்பதும் அவருடைய வாக்குத்தான். நம்பிக்கையை வளர்த்தால் நலம் பெறலாம்.

# WORLD CUP CHAMPION ARGENTINA

## உலகக் கிண்ணம் - 2007 -UNDER 20



## விளையாட்டுத் தகவல்கள் 218

கனடாவில் சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிபா) நடத்தும் 16வது Under 20 (20 வயதுக்குட்பட்டோருக்கான) உலக கோப்பை கால்பந்து தொடர் சிறப்பாக நடந்து முடிந்துள்ளது. இதில் மொத்தம் 24 அணிகள் ஆறு பிரிவுகளாக பங்கேற்றன.

இவ் உலக கிண்ணத்தில் நடைபெற்று முடிந்த சுவாரிசியமான ஆட்டங்களை இங்கு பார்ப்போம். 'சி' பிரிவில் நடந்த இரண்டாவது லீக் சுற்றுப் போட்டியில் மெக்சிக்கோ, போர்த்துக்கல் அணிகள் மோதின. ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இரண்டாவது பாதி துவங்கிய மூன்றாவது நிமிடத்தில் மெக்சிக்கோவின் டோஸ் சான்டோஸ் தனக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பை கோலாக மாற்றி, அசத்தினார். இவரை தொடர்ந்து மெக்சிக்கோவின் பாப்லோ பரேரா இரண்டாவது கோலை அடிக்க, மெக்சிக்கோ 2 - 0 என முன்னிலை பெற்றது. ஆட்டம் முடிய ஒரு நிமிடமே இருந்த நிலையில் போர்த்துக்கல்லின் பாசிகோ ஆன்டியூன்ஸ் 'ப்ரி கிக் ஷாட்' அடித்து அணிக்கு ஆறுதல் கோலை பெற்று தந்தார். இறுதியில் மெக்சிக்கோ 2 - 1 என்ற கோல் கணக்கில் வென்றது.

**விக்டோரியா** - கனடாவில் நடந்த 20வயதுக்குட்டோருக்கான உலக கோப்பை தொடரில் பிரேசில் 2 - 4 என்ற கோல் கணக்கில் ஸ்பெயினிடம் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறியது. ஸ்பெயின் காலிறுதிக்கு முன்னேறியது. இரண்டாவது சுற்றுப்போட்டியில் பிரேசில், ஸ்பெயினை எதிர்கொண்டது. மிகவும் விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியின் 39வது நிமிடத்தில் பிரேசிலின் லியாண்டரோ லிமா முதல் கோல் அடித்து அணிக்கு முன்னிலை பெற்று தந்தார். இவரை தொடர்ந்து அலெக்சான்டரே படோ இரண்டாவது கோல் அடித்தார். இதையடுத்து சுதாகரித்து கொண்ட ஸ்பெயினுக்கு கொரார்டு பிக்கு முதல் கோலை பெற்று தந்தார். முதல் பாதியில் பிரேசில் 2 - 1 என முன்னிலையில் இருந்தது. இரண்டாவது பாதியின் துவக்கத்தில் இரு அணிகளும் கோலடிக்க மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. இதனால் பிரேசில் வெற்றி பெறும் என நினைத்த வேளையில் ஆட்டத்தின் கடைசி ஆறாவது நிமிடத்தில் ஸ்பெயினின் ஜாவி கார்சியா இரண்டாவது கோலை அடித்து, ஆட்டத்தை சமநிலைக்கு கொண்டு வந்தார்.

இதையடுத்து கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஸ்பெயின் வீரர்கள் அல்பெர்டோ பியுனோ (102 வது நிமிடம்), அட்ரியன் (121வது நிமிடம்) தலா ஒரு கோலடிக்க ஸ்பெயின் 4 - 2 என்ற கோல் கணக்கில் வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றது. கடந்த முறை அரையிறுதிவரை முன்னேறிய பிரேசில் காலிறுதி வாய்ப்பை இழந்தது.

மற்ற இரண்டாவது சுற்றுப்போட்டிகளில் அமெரிக்கா 2-1 என உருகுவேயையும், செக்குடியரசு 4 - 3 என ஜப்பானையும், அவுஸ்திரேலியா 2 - 1 என சாம்பியாவையும் வென்று காலிறுதிக்குள் நுழைந்தன.

**ரொறொன்ரோ** - கனடாவில் நடந்த 20வயதுக்குட்போருக்கான உலககோப்பை தொடரின் இரண்டாவது சுற்றுப்போட்டியில் 3 - 1 என்ற கோல் கணக்கில் போலந்தை வீழ்த்திய ஆர்ஜென்டீனா காலிறுதிக்கு தகுதி பெற்றது. இறுதியாட்டத்தில் ஆர்ஜென்டீனா, செக்குடியரசை 2 - 1 என்ற கோல் விகிதத்தில் வென்று சம்பியன் கிண்ணத்தை தன் வசமாக்கியது. ஆட்டத்தின் 33வது நிமிடத்தில் போலந்தின் ஜான் சைக்கும், 40வது நிமிடத்தில் ஆர்ஜென்டீனாவின் மரியாவும் கோலடிக்க 1 - 1 என்ற கணக்கில் போட்டி விறுவிறுப்பை எட்டியது.

இரண்டாவது பாதியில் ஆர்ஜென்டீனாவின் கை ஓங்கியது. முன்னணி வீரர் அக்யூரா ஆட்டத்தின் 46 மற்றும் 86 வது நிமிடத்தில் அபாரமாக ஆடி கோல் அடிக்க, இறுதியில் 3 - 1 என்ற கணக்கில் ஆர்ஜென்டீனா, போலந்தை வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றது. காலிறுதியில் ஆர்ஜென்டீனா மெக்சிக்கோவை எதிர்கொண்டது. மற்ற இரண்டாவது சுற்றுப்போட்டிகளில் மெக்சிக்கோ 3 - 0 கணக்கில் காங்கோவையும், சிலி 1 - 0 கணக்கில் போர்த்துக்கல்லையும், நைஜீரியா 2 - 1 கணக்கில் சாம்பியாவையும் வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றன. இத்தொடரின் காலிறுதிப்போட்டியில் ஆர்ஜென்டீனா, மெக்சிக்கோ அணிகள் பலப்பரீட்சை நடத்தின. பரபரப்புடன் துவங்கிய இப்போட்டியில் இரு அணிகளும் கோல் அடிக்க மிகவும் தடுமாறின. தடைகளை மீறி ஆட்டத்தின் 45வது நிமிடத்தில் ஆர்ஜென்டீனாவின் மோரலேஸ் அபாரமாக ஒரு கோலடித்தார். இரண்டாவது பாதியில் துடுப்பாட்டம் ஆடிய ஆர்ஜென்டீனா, மெக்சிக்கோவின் கோலடிக்கும் முயற்சியை தகர்த்தது. இறுதியில் 1 - 0 கணக்கில் வெற்றி பெற்ற ஆர்ஜென்டீனா அரையிறுதிக்குள் நுழைந்தது. மற்றொரு காலிறுதிப் போட்டியில் சிலி 4 - 0 கணக்கில் நைஜீரியாவை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றது. அரையிறுதிப் போட்டியில் ஆர்ஜென்டீனா, சிலியை எதிர்கொண்டது.

எட்மான்டனில் நடந்த முதல் அரையிறுதி போட்டியில் செக்குடியரசு அணி, அவுஸ்திரேலியாவை சந்தித்தது. ஆட்டத்தின் நாலாவது நிமிடத்தில் தாமஸ் மிக்கோலாவின் கோல் மூலம் முன்னிலை பெற்றது. இவரை தொடர்ந்து மார்டின் பெனின் 15வது நிமிடத்தில் இரண்டாவது கோலை அடிக்க, செக்குடியரசு முதல் பாதியில் 2 - 0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியில் தற்காப்பு ஆட்டத்துக்கு மாறிய செக்குடியரசு, அவுஸ்திரேலியா வீரர்கள் கோலடிக்காமல் பார்த்து கொண்டது. இறுதியில் செக்குடியரசு 2 - 0 என்ற கோல் கணக்கில் வென்று, இறுதியாட்டத்தில் நுழைந்தது.

ரொறொன்ரோவில் நடந்த இரண்டாவது அரையிறுதி போட்டியில் நடப்பு சாம்பியன் ஆர்ஜென்டீனா, சிலி அணிகள் மோதின. இதில் ஆர்ஜென்டீனா டி மரியா ஆட்டம் துவங்கிய 12வது நிமிடத்தில் முதல் கோலை அடித்து சில அணிக்குள் அதிர்ச்சி தந்தார். இதையடுத்து பதிலடி கொடுக்க கடுமையாக போராடிய சில வீரர்களால் ஆர்ஜென்டீனாவின் பலமான தற்காப்பை உடைக்க முடியவில்லை. முதல் பாதியில் ஆர்ஜென்டீனா 1 - 0 என்ற கோல்கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியின் 65வது நிமிடத்தில் ஆர்ஜென்டீனாவின் மேக்ஸி மோரல்ஸ் கொடுத்த அருமையான பாசை கிளாடியோ யோகப் கோலாக மாற்றி, அசத்தினார். ஆட்டம் முடிய இரண்டு நிமிடம் இருந்த நிலையில் மோரல்ஸ் ஒரு கோலடித்து, ஆர்ஜென்டீனாவின் வெற்றியை உறுதி செய்தார். முடிவில் ஆர்ஜென்டீனா 3 - 0 என்ற கோல் கணக்கில் வென்று இறுதியாட்டத்திற்கு தேர்வு பெற்றது.

2005 ஆம் ஆண்டு U 20 இறுதிப்போட்டியில் நையீரியாவை வென்று சம்பியன் கிண்ணத்தை தன்வசமாக்கிய ஆர்ஜென்டீனா நடைபெற்று முடிந்த 16ஆவது U - 20 உலக கிண்ணப்போட்டியில் 6 தடவைகள் பட்டத்தை வென்ற ஒரே ஒரு அணி என்ற பெருமையை ஆர்ஜென்டீனா பெறுகின்றது.

### அப்படியே அள்ளியது இலங்கை! தொடரும் வங்கதேச சோகம்

**கொழும்பு** - வங்கதேசத்துக்கு எதிரான ஒரு நாள் தொடரை இலங்கை 3 - 0 என அப்படியே அள்ளியது. நேற்று நடந்த கடைசி ஒரு நாள் போட்டியிலும் ஆதிக்கம் செலுத்திய இலங்கை 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது.

40 ஓவர்கள் - இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்ட வங்கதேச அணி மூன்று ரெஸ்ற், மூன்று ஒரு நாள் போட்டிகளை கொண்ட தொடரில் பங்கேற்றது. முதலில் நடந்த ரெஸ்ற் தொடரை இலங்கை 3 - 0 என முழுமையாக வென்றது. அடுத்து நடந்த முதலிரண்டு ஒரு நாள் போட்டிகளையும் எளிதாக வென்று, தொடரை 2 - 0 என கைப்பற்றியது. இந்நிலையில் மூன்றாவது மறறும் கடைசி ஒரு நாள் போட்டி நேற்று கொழும்பிலுள்ள பிரேம தாசா மைதானத்தில் நடந்தது. நேற்று முன்தினம் இரவு மழை பெய்ததால் ஆட்டம் துவங்க தாமதமானது. இதையடுத்து போட்டி 40 ஓவர்களாக குறைக்கப்பட்டது. 'டாஸ் வென்ற வங்கதேச அணித்தலைவர் அஷரபுல் முதலில் பீல்டிங் தேர்வு செய்தார்.

**முபராக் அரைசதம்** - ஐந்தாவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த முபராக், தில்ஷன் ஜோடி அணியை சரிவிலிருந்து மீட்டது. அதிரடியாக விளையாடிய தில்ஷன் 34 பந்துகளில் 39 ஓட்டங்கள் எடுத்து, வெளியேறினார். இதையடுத்து வழக்கமாக நான்காவது வீரராக வரும. ஜெயவர்த்தனா நேற்று 7வது வீரராக வந்தார். இவர் 20 ஓட்டங்களுக்கு பெவிலியன் திரும்பினார். மறுமுனையில் முபராக் ஒரு நாள் போட்டிகளில் தனது அதிக பட்ச ஸ்கோரை எட்டினார். இவர் 82 பந்துகளில் ஆறு பவுண்டரிகள் உட்பட 72 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இலங்கை 39.5 ஓவரில் 196 ஓட்டங்களுக்கு ஆல் அவுட்டானது.

**தமிம் ஆறுதல்** - இதையடுத்து களமிறங்கிய வங்கதேசத்துக்கு ஓமர், ரஹிம் 'டக்' அவுட்டாகி அதிர்ச்சி அளித்தனர். தமிம் இக்பால் மட்டும் சிறப்பாக விளையாடி அரைசதம் கடந்தார். இவர் 1 சிக்சர், 3 பவுண்டரிகளுடன் 54 ஓட்டங்கள் குவித்து வெளியேறினார். அஷ்ரபுல்20, அறிமுக வீரர் மகமுதுல்லா 36 ஓட்டங்கள் எடுத்தனர். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் வெளியேற வங்கதேசம் 37.1 ஓவரில் 157 ஓட்டங்களுக்கு ஆல் அவுட்டானது. 39 ஓட்டங்களின் வித்தியாசத்தில் இலங்கை தொடரை 3 - 0 என கைப்பற்றியது. ஆட்டநாயகன் விருதை முபராக்கும், தொடர்நாயகன் விருதை பவுலிங்கில் அசத்திய ஜெயசூரியாவும் தட்டி சென்றனர்.

### கோபா, அமெரிக்கா 8வது தடவை பிரேசில் சம்பியன்

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட கோபா அமெரிக்க கால்பந்து தொடரில் மீண்டும் ஒரு முறை சாதித்தது பிரேசில். நடந்த 'விறுவிறு' பைனலில் ஆர்ஜென்டீனாவை 3 - 0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி தொடர்ந்து இரண்டாவது முறையாக கோப்பை வென்றது. ஆர்ஜென்டீனா அணித்தலைவர் ராபர்டோ அயாலா 'சேம் சைட் கோல்' அடித்து அணியின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமானார்.



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி 08ஆம் பக்கம்


**Raphael Maharaja**

Barrister, Solicitor & Notary Public

*Tel: 416-847-7077* *Fax: 416-847-7088*

211 – 2425 Eglinton Avenue East, Scarborough, ON M1K 5G8

கனேடிய தமிழ் வழக்கறிஞர்



# வீட்டின் விலை, நிலைமை ஒப்பீடு: 1989 / 2007

நாம் கிட்டத்தட்ட 20 வருடங்களிற்கு முன்பாக சென்றுபார்த்தால், இன்றைய வீட்டின் விலை அதிகரிப்பு விற்கப்படும் வீடுகளின் எண்ணிக்கை போன்றவற்றில் சில ஒற்றுமைகள், வேற்றுமைகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

1980 இன் இறுதிப்பகுதிகளில் கனடிய பொருளாதாரம் குறிப்பாக ஒன்ராரியோ, மிகவும் உயர்வாகக் காணப்பட்டது. எவரிற்கும் வேலை எடுக்கக்கூடிய நிலைமை, கனடிய டொலரின் விலை அதிகரிப்பு, மக்களின் அதீத செலவு. ஆனால் இன்று (2007), மக்களின் செலவு கட்டுப்பாடுடன் காணப்படுகின்றது. டொலரின் பெறுமதி அதிகரிக்கின்றது.

முக்கியமாக கனடிய பொருள்களிற்கு வெளிநாடுகளில் சிறந்த வரவேற்பு (Demand) ஏற்பட்டுள்ளது. 1980களின் இறுதியில் பொருளாதார பணவீக்கத்தின் (Inflation Rate) அதிகரிப்பை அடக்குவதற்காக வட்டிவீதம் அதிகரிக்கப்பட்டது. இதனால் ஐந்து வருடத்திற்கு வட்டிவீதம் 15 வீதத்திற்கு மேலாக சென்றுவிட்டது. (இன்றைய ஐந்துவருட வட்டிவீதம் 5.75%) அன்று ஐந்துவருட வட்டி வீதம் 15% அளவிற்கு செல்ல வீட்டின் வியாபாரம் ஸ்தம்பிக்க தொடங்கி விட்டது. தொடர்ச்சியாக வட்டிவீத அதிகரிப்பு அன்றைய பண வீக்கத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. ஆனால் பொருளாதாரம் தலைகீழாக மாறிவிட்டது. இன்றைய காலகட்டத்தில் தொழில்புரிபவர்களின் எண்ணிக்கை, செலவு, வட்டிவீதம் என்பன சாதகமாகவே காணப்படுகின்றது.

கனடிய பொருளாதாரத்தில் கனடிய மேற்கு மாகாணங்களில் மக்களின் செலவுகள், மத்திய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது அதிகமாகவே காணப்படுகின்றது. இதற்கு மேற்கு மாகாணங்களில் பொருளாதாரம் மிகவேகமான வளர்ச்சியே காரணமாகும். இந்த மாகாணங்களின் பொருளாதாரம் மூலப்பொருட்களிலும், எண்ணெய்யிலும் தங்கியுள்ளது. வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, இதனால் தொழிலிருந்து ஓய்வு பெறுபவர்களிலும் எண்ணிக்கையும் அதிகரிப்பதால், புதியவர்களிற்கு சம்பளம் அதிகரித்த தொழில்கள் கிடைக்க வசதிகள் உண்டு. இவர்கள் தமது குடும்ப வளர்ச்சிக்காக பெரிய வீடுகள் வாங்கக்கூடிய வசதிகள் உண்டு. அன்று கனடிய அரசின் கடன் மிகக்கூடிய அளவில் இருந்தது. இதனால் அவற்றைக் குறைப்பதற்காக செலவுகள் குறைக்கப்பட்டதுடன், புதிய வரிகளும் கொண்டு வரப்பட்டன.

இன்று வரி இறக்கமும், அரச செலவுகளும் பொருளாதார வளர்ச்சியை நோக்கியே செல்கின்றன. இன்றைய உலகளாவிய பொருளாதாரக் கொள்கையினால் (Globalization) கனேடிய வியாபார நிலையங்கள் மோல்கள் (Mall) விலைகுறைந்த பொருட்களால் நிரப்பப்படுகின்றன. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. மறுபக்கத்தில் Globalization இனால் கனடா Manufacturing Sector இல் நிறைய தொழில்களை இழந்துள்ளது. இருந்தும் Information and Technology Sector முன்னணியில் காணப்படுவதால் மேலதிக தொழில்வாய்ப்புகள் அதிகரித்துள்ளது. 1980களின் நடுப்பகுதியில் கட்டப்பட்டு இருந்த வீடுகள் Sub division ஆகவே காணப்பட்டன. ஆனால் இன்று அதிக மானவை அடுக்குமாடிக் கட்டிடங் களாகவே காணப்படுகின்றது.

ரொறொன்ரோப் பகுதியில் ஏற்பட்ட நிலப்பற்றாக்குறையே இதற்கு காரணம்.

எனவே அடுக்குமாடிக் கட்டிடங்களே கூடுதலாகக் கட்டப்படலாம். எதிர் காலத்திலும் இதே நிலைமை தொடரும். எனவே எதிர்வரும் காலங்களில் ரொறொன்ரோப்பகுதியில் 1500 - 2000 எண்ணிக்கைகள் Residential Subdivision வீடுகள் கட்டுவது இலகுவான காரியமாக இருக்காது.

| | 1989 | 2007 |
|---|---|---|
| | Berlin wall உடைத்தல் | War in Afghanistan & Iraq |
| டொலரின் பெறுமதி | 85சதம் (US) | 96சதம் (US) |
| வேலை இல்லாதோர் எண்ணிக்கை | 7.5% | 6.1 (33வருடத்தில் குறைந்தது. |
| மக்கள் தொகை | 26.3 மில்லியன் | 32.8 மில்லியன் |
| கனடிய மத்திய வங்கியில் வட்டிவீதம் | 13% | 4.5% (கடந்த மாதத்தில் 0.25% அதிகரிப்பு ஏற்பட்டது.) |
| 5 வருட வட்டிவீதம் (Closed Mortgage) | 15% | 5.75% |
| பொருளாதார வளர்ச்சி | 3% GDP | 3.75 GDP (2007 1st Quarter) |
| தொழில்நுட்பம் | நின்ரென்டோ (Nintendo) | I pone |
| பொருளாதார வியாபாரம் | கனடா அமெரிக்க Free Trade Jan. 01, இலிருந்து நடைமுறைக்கு வந்தது. | கனடா, தென்அமெரிக்க நாடுகளுடன், மத்திய அமெரிக்க நாடுகளுடனும் Freetrade ஒப்பந்தம் செய்ய தீர்மானித்துள்ளது. |

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் - 256**




குறுகிய காலத்தில் 100 இற்கும் மேற்பட்ட வீட்டு முகவர்களுடன் இரு இடங்களில்

புதிய, அனுபவமிக்க வீட்டுப்பிரதிநிதிகள் எமது நிறுவனத்தில் இணைந்து வெற்றி பெற்று சாதனைகள் புரிய

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

*Independently owned & operated

**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**

**House for sale**
- Neilson & Sheppard,
- 3 bedroom house
- 2 storey
- Asking only $244,900

**Condo. for sale**
- Neilson & Mclevin
- 2 washrooms
- Renovated vacant property
- Price $154, 900.

**House for sale**
- Neilson & Mclevin
- 3 bedroom house for sale.
- Asking price $232,000

**Condo. for sale**
- Downtown
- Brand new
- 1 bedroom + den condo.
- Asking $279,000.

**Nantha Aiyadurai**
Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# நீ செல்லும் பாதையில்

அடர்ந்து படர்ந்து உயர்ந்து நிமிர்ந்து
கருமழையைப் பொழிந்து
செழித்து வாழும் இருண்ட காட்டில்
வீடு கட்டுவதற்குக் கப்புத் தறிக்கவென்று
பற்றைக்குள் புகுந்தேன், அப்பொழுது

தோளில் கொளுவும் சூரை முள்
காலில் கடிக்கும் கட்டெறும்பு
முதுகில் கிள்ளும் முசுறு

வாசம் வீசும் சந்தனம்
வீரம் பேசும் கருங்காலி
உரம் ஏறிய பாலை
அழகியலில் முதிரை

ஊஹ்...
முதுகில் அப்பிய காஞ்சோண்டி
தோலில் எரிந்து கடிக்கின்றது

உஸ்...
உயர்ந்த தில்லை மரக் கிளையைச் சுற்றி
உறங்கிப் படுத்திருக்கும் புள்ளிப் புடையன்
ஊதுகின்றது கோபப் பெருமூச்சை

கள்ளிக் கொடியுடன் கலந்து நிற்கும்
முள்ளுச் செடிகள்
தலை மயிரைப் பிடித்து இழுக்கும்

'கவனம் கள்ளிப்பால் கண்ணுக்குள் போனால்
கண் குருடாகும்'
என்று எச்சரிக்கை செய்யும் உறவுகள்

சிவப்பும் கறுப்புமாய் சிரித்து
வா வா என அழைக்கும்
நாவல் ஈச்சம் பழக் குலைகள்

உதிர்ந்து கொட்டுப்பட்டுக் காலில் மிதிபடும்
குண்டுமணிச் சிதறல்
சட சட என்று சிறகடித்து
கத்திப் பறக்கின்றது காட்டு வௌவால்

துள்ளிக் குதித்து ஓடும் முயலும் தாயும்

காலுக்குள் மிதிபடும் காட்டெருமைச் சாணகம்
ஆனை நடந்து சென்ற
ஆழமான அடியின் பள்ளங்களை மூடியுள்ளன
காய்ந்த இலைச் சருகுகள்

வாயை மூடி மூடித் திறக்கும்பொழுது
சொண்டு இரண்டையும் ஒட்டுகின்றது
பாலைப்பழம்.

முசுறு: அரைச்ச மஞ்சள் நிறமுடைய ஒருவகைக் கடி எறும்பு.



முத்துராஜா

# திருக்கோயிற் குளம்

பண்: திருத்தாண்டகம்

ஆனாவுக் கானாவாய் அ∴கே னத்துக்(கு)
ஆ∴கேனமாய்த் தோன்றும் ஆற்ற லாளர்
ஆனாவும் ஊனாவும் மகர மெய்யும்
ஆனவோர் மந்திரத்தின் அகத்தும் உள்ளார்
நானாரென் றாராயின் நாடி தாங்கும்
நல்லரங்க உள்ளத்தில் நடனஞ் செய்வார்
தேனாரும் சோலைவள வவுனி யாவின்
திருக்கோயிற் குளம்மேவித் திகழ்வா ராமே.

ஈரமன மகளையிடப் பாகம் வைத்தார்
இளமதியை வளநதியைச் சென்னி வைத்தார்
சூரர்களின் கோட்டைகளைச் சுட்டெ ரித்தார்
சுகமளிக்கும் சிவபுரங்கள் கட்டு வித்தார்
ஆரநினைந் தணைந்துருகும் அன்பர் தங்கள்
அருவினைகள் தீர்த்தருளி அகம கிழ்வார்
தீரமிகு வீரர்பதி வவுனி யாவின்
திருக்கோயிற் குளம்மேவித் திகழ்வா ராமே.

எங்குமுயர் திருக்கோலம் இலங்க நிற்பார்
என்றென்றும் எல்லோரும் வணங்க நிற்பார்
சங்கதிகள் யாவையுமே அறிந்தி ருப்பார்
தானேபேர் அறிவாகிச் செறிந்தி ருப்பார்
அங்கணனார் அண்டமெலாம் அருளிக் காப்பார்
ஆருயிர்கள் வினைக்கேற்ப நியாயந் தீர்ப்பார்
சிங்களரும் வந்துதொழும் வவுனி யாவின்
திருக்கோயிற் குளம்மேவித் திகழ்வா ராமே

மூத்தவிநா யகர்தம்மைத் தந்த தந்தை
மூவுலகும் முன்னேறத் தொழுது வேண்டி
ஏத்துமரும் பெருந்தலைவர் இணையில் லாதார்
இலங்குமழு மான்கரங்கள் ஏற்றி வைத்தார்
பூத்தமரக் கொன்றையின்கீழ்ப் பொலிந்தி ருப்பார்
புவியினிலே புதுமைகளைத் தோற்று விக்கக்
கூத்திடுவார் குறைவில்லா வவுனி யாவின்
கோயிற்குளம் குடிகொள்ளும் கோனார் தாமே.

மயல்கொண்டு மனமலையும் வகையில் மாறி
மாறியிடர் புரிபொறிகள் வணங்க வைப்பார்
இயல்பான எண்குணங்கள் தமக்கும் மேலாய்
எல்லையிலாக் குணங்களையும் இயற்றி னாலும்
தயவான தாய்போல வருளும் தன்மை
தலையான தெனவன்பர் சாட்சி சொல்வார்
குயில்பாட மயிலாடும் வவுனி யாவின்
கோயிற் குளம்குடிகொள்ளும் கோனார் தாமே.

உருவாயும் அருவாயும் உலவ வல்லார்
ஒப்பற்ற அருவுருவ மாயு முள்ளார்
திருமாலும் நான்முகனும் தெரிய வொண்ணாத்
செழுஞ்சோதி வடிவாகப் பரந்து நின்றார்
அருவாய வல்வினைகள் அகன்று செல்ல
அகத்தூய அடியவரை ஆண்டு கொள்ளக்
குருவாயும் வந்தருள்வார் வவுனி யாவின்
கோயிற் குளம்குடிகொள்ளும் கோனார் தாமே.

படமாடக் கோயிலுக்கு நாளும் வந்து
பணிந்துருகிப் பத்தியுடன் வணங்கு கின்ற
நடமாடும் கோயில்களுள் ளேயும் நின்று
நடமாடி நலஞ்செய்யும் மக்கள் நாதர்
கொடுநோய்கள் தீர்த்தருளும் வைத்திய நாதர்
குறியெதிர்ப்பை நோக்காதார் செறிம ரங்கள்
குடைபோன்று நிழல்விரிக்கும் வவுனி யாவின்
கோயிற் குளம்குடிகொள்ளும் கோனார் தாமே.

செம்பொருளாய்த் திரவியமாய்த் தேனாய்ப் பாலாய்
சித்தத்துள் தித்திக்கும் தேவ தேவர்
உம்பரைமுன் நஞ்சுண்டு காத்த செல்வர்
ஓம்பொருளை மைந்தனிடம் கேட்ட தந்தை
எம்பெருமான் என்னிடர்தான் வந்துற் றாலும்
எங்கேநாம் உனைவிட்டுச் செல்வோம் என்றே
கும்பிடுவார்க் கருள்புரிவார் வவுனி யாவின்
கோயிற் குளம்குடிகொள்ளும் கோனார் தாமே.

ஆதியிலே சிந்துவெளி மக்கள் போற்றும்
ஆண்டவராய் அருள்செய்த வரலா றுள்ளார்
நீதியிலே யார்க்கும்பொது வாக நின்றார்
நிகரற்ற சித்தாந்த தத்து வத்தில்
சாதியின்றிப் பேதமின்றி மக்கள் எல்லாம்
தன்படைப்பில் சமமென்னும் தருமம் காப்பார்
கோதிலுயர் மக்கள்வாழ் வவுனி யாவின்
கோயிற் குளம்குடிகொள்ளும் கோனார் தாமே.

எந்தவிடர் வந்தாலும் இழிவு செய்யா(து)
எடுத்தவடி முன்வைத்தே இடைவி டாது
பைந்தமிழர் பதியாய வவுனி யாவின்
பயனாய கோயிற்குளம் பத்தி யொடு
வந்தகிலாண் டேசுவரர் தம்மை நாளும்
வணங்கிவரின் அந்தரங்கள் யாவும் நீங்கும்
செந்தமிழீ ழமும்பெற்றுத் தமிழர் வாழ்வில்
சிறந்தோங்கிச் செழித்திடுதல் திண்ண மாமே.

கோயிற்குளம் சிவாலயம் வன்னிப் பிரதேசத்தின் பெருநகரான வவுனியாவில் இருந்து சிதம்பரபுரம் செல்லும் வழியில் அமைந்துள்ளது.
இறைவர்: அகிலாண்டேசுரர்.
இறைவி: அகிலாண்டேசுவரி.

கவிஞர் வி. கந்தவனம்



# WORLD CUP CHAMPION...

06 ஆம் பக்கத் தொடர்ச்சி

வெனிசுலாவில் 42வது கோபா அமெரிக்க கால்பந்து தொடர் நடந்தது. மொத்தம் 12 அணிகள் பங்கேற்ற இத்தொடரின் பைனலுக்கு 7முறை கோப்பை வென்ற பிரேசிலும், 14முறை கோப்பை வென்ற ஆர்ஜென்டீனாவும் தகுதி பெற்றன. இரு அணிகளும் சமபலம் வாய்ந்தவை என்பதால் ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தது.

**அதிரடி துவக்கம்** - 'கிக் ஆப்' விசில் ஊதிய முதல் நிமிடத்தில் இருந்தே பிரேசில் ஆதிக்கம் ஆரம்பமானது. ஆட்டத்தின் நான்காவது நிமிடத்தில் இலானோ கொடுத்த 'பாசை' பெற்ற ஜுலியா பாப்டிஸ்டா, அப்படியே ஒரு சூப்பர் கோல் அடிக்க, பிரேசில் ரசிகர்கள் உற்சாகத்தில் மிதந்தனர். பின்னர் எட்டாவது நிமிடத்தில் ஆர்ஜென்டீனாவுக்கு ஒரு அருமையான வாய்ப்பு கிடைத்தது. ஆனால் ரிக்கில்ம் பந்தை 'கோல் போஸ்டில்' அடித்து வாய்ப்பை வீணாக்கினார்.

**அணித்தலைவர் தவறு** - முதல் பாதி முடிய ஐந்து நிமிடங்கள் இருந்த போது அந்த பரிதாபம் அரங்கேறியது. 40வது நிமிடத்தில் பிரேசிலின் டேனியல் ஆல்வ்ஸ் அடித்த பந்து கோல் போஸ்டுக்கு மிக அருகே சென்றது. அப்போது அவசரப்பட்ட ஆர்ஜென்டீனா அணித்தலைவர் ராபர்ட்டோ அயாலா தாழ்வாக படுத்து தடுக்க முற்பட்டார். ஆனால் அவரது துரதிஷ்டம், பந்து கோல் போஸ்டுகருள் புகுந்து 'சேம்சைடு' கோலாக மாறியது. அணித்தலைர் மாபெரும் தவறு செய்ய ஆடிப்போனது ஆர்ஜென்டீனா. சும்மா கிடைத்த இந்த கோல் மூலம், முதல்பாதி முடிவில் பிரேசில் அணி 2 - 0 என்ற முன்னிலை பெற்றது.

எட்டாவது முறை - இரண்டாவது பாதியிலும் பிரேசில் வீரர்கள் கலக்கலாக ஆடினர். ஆர்ஜென்டீனாவின் முயற்சிகளை தவிடுபொடியாக்கினர். 69வது நிமிடத்தில் டேனியல் ஆல்வ்ஸ் அடித்த சூப்பர் கோல் மூலம் பிரேசில்அணி 3 - 0 என்ற கணக்கில் வெற்றியை தன்வசமாக்கியது. கடந்தமுறை கோப்பை வென்ற பிரேசில் மீண்டும் சாதித்துள்ளது. தவிர கோபா அமெரிக்கா கால்பந்து தொடரில் 8வது முறையாக சாம்பியன் பட்டம் வென்றுள்ளது. இதுவரை 14முறை இத்தொடரில் கோப்பை வென்றுள்ள ஆர்ஜென்டீனா, படுதோல்வி அடைந்து அதிர்ச்சியில் உறைந்தது.

**சாதிக்கும் படை** - ஐந்து முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற பிரேசில் அணி, இம்முறை கோபா அமெரிக்கா தொடரில் ரொனால்டினோ, கக்கா போன்ற நட்சத்திர வீரர்கள் இல்லாமல் களமிறங்கியது. இவர்கள் இல்லாத நிலையிலும் கோப்பை வென்று கால்பந்து அரங்கில் தனது ஆதிக்கத்தை அழுத்தமாக நிலைநாட்டியுள்ளது.

**கொண்டாட்டம்** - கோப்பை வென்றதை தொடர்ந்து பிரேசில் முழுவதும் உற்சாக கொண்டாட்டங்கள் அரங்கேறின. வெற்றி குறித்து அணியின் மானேஜர் துங்கா கூறுகையில், 'உழைக்கும் வர்க்கத்துக்கு கோப்பை அர்ப்பணிக்கிறோம். கால்பந்து போட்டிகளில் பிரேசில் வெற்றி பெறுவதே இவர்களது வாழ்க்கையில் மகிழ்ச்சி தரும் ஒரே விடயம்', என்றார்.

## இந்தியன் கிரிக்கெட் லீக்கில் இணையும் முன்னணி நட்சத்திரங்கள்

இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கபில்தேவை தலைவராகக் கொண்டு செயல்படத் தொடங்கியுள்ள இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐசிஎல்) அமைப்பில் அவுஸ்திரேலியாவின் ஷேன் வார்னே, கிளென் மெக்ராத் ஆகியோர் இணைந்துள்ளனர்.

சிட்னியில் இத்தகவலை உறுதி செய்துள்ள கபில்தேவ், அதற்கான ஒப்பந்தத்தில் இருவரும் கையெழுத்து போட்டுள்ளனர் என்றார். அவுஸ்திரேலியாவிலிருந்து மேலும் சில இளம் வீரர்கள் ஐசிஎல் அமைப்பில் இணைய உள்ளனர் என கபில் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையே, நியூசிலாந்தின் ஸ்டீபன் பிளெம்மிங்கும் இந்தியன் கிரிக்கெட் லீக்கில் இணைய விருப்பம் தெரிவித்துள்ளார். அவர் தடாலடியாக சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்று விட்டு இந்தியன் கிரிக்கெட் லீக்கில் சேரத் திட்டமிட்டுள்ளார் என செய்தி வெளியாகியுள்ளது. இது குறித்து ஐசிஎல் நிர்வாகிகளுடன் அவர் பேசி வருவதாகவும், ஆண்டுக்கு ரூ. 1.75 கோடி சம்பளம் கேட்டுள்ளதாகவும் 'தி அவுஸ்திரேலியா' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் மாயாஜால பந்து வீச்சாளர் ஷேன் வார்னே, வேகப்பந்து வேதாளம் கிளென் மெக்ராத் ஆகியோர் இணைவதற்கு, இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித்தலைவர் டோனி கிரெய்க் முன்னின்று செயல்பட்டுள்ளார்.

ஐ.சி.எல் அணியின் திட்டத் தலைவர்களான ஹிமான்சு மோடி, டோனி கிரெய்க் ஆகியோரை சந்தித்ததாக வார்னேவின் மேலாளர் ஜேம்ஸ் எர்ஸ்கைன் அவுஸ்திரேலியா செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு ரூபா 8 கோடி வார்னே தரப்பில் கேட்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. வார்னே தற்போது ஹேம்ப்ஷயர் அணிக்கு தலைவராக உள்ளார். அந்த அணிக்காக அடுத்த இரு சீசன்களிலும் விளையாட உள்ள நிலையில் இந்த ஆண்டு ஐ.சி.எல் போட்டியில் அவர் விளையாட முடியாது என்று எர்ஸ்கைன் தெரிவித்தார்.


நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு : **416.439.8549**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)

# வாழ்க்கை சுவர்க்கமாவது இனிய இல்லமொன்றில்...

### Don Mills/Eglinton


**$124,900**
Price To Sell. Why Rent Own It, One Of A Kind With Washer And Dryer In The Unit, Ac In Liv&Mst-Bedrm, Sauna/In-Pool/Exc-Rm/Security/Under-Pak/2

### Eglinton/Markham


**$127,000**
A Lovely Suite, Lowest Price -Act East ** Excellent Location * Spacious 2Bdrms ,Lovely View,Fridge,Stove,Parquet Floor,Underground Parking

### Birchmount/Ellesmere


**$189,900**
Location, Location, Location! Brand New Luxury Tridel Built. 1 Bdrm + Den. North View. Indoor Pool, Hot Tub, Tv/Media Room, Guest Suites, Fitness Center

### Kennedy/Ellesmere


**$214,900**
Fabulous 3-Bdrm Townhouse. Excellent Condition, Short Walk To Ttc, Rt, Supermarket, School. Seconds Away From Highway 401

### Neilson/Sheppard


**$232,000**
Excellent Starter Home. Move-In Condition, Recently Painted, Close To Shopping Mall

### Morningside/Oldfinch


**$244,900**
Close To Ttc, School & Hwy Wide Driveway, New Roof (2006) All Elfs, Fridge, Stove, Washer, Dryer, Freezer

### Vankirk/Sandalwood


**$276,900**
Immaculate 6 Yr.New 3 Bdrm Located In Great Neighbourhood.All Brick In Move In Condition.Recently Painted Priced For Quick Sale.

### Markham/Eglinton


**$299,900**
Only 3 Years, New All Brick Freehold Townhouse, No Maintenance Fee, Convenient Location

### Williamsprwy/Ching


**$324,900**
Brand New Mattamy Home With $15,000 In Upgrades As Per Seller. **Crossroad: William Parkway/Chinguacousy

### Britannia/10th Line


**$419,900**
Beautiful Fernbrook Home. One Of The Largest Models On A 54 Foot Corner Lot. Huge Rooms, Spacious Floor Plan

### Bayview/Newman


**$459,900**
o5Rgeous Mattamy Home Close To Lake Wilcox.Quiet & Child Safe Area.Over $30,000 Upgraded,Including 9'Ceiling.

### Markhamrd/14th


**$479,000**
Gorgeous 10+ 4-Bdrm 2500 Sq Ft Home, Circular Oak Staircase, 9-Ft Ceilings, Pot Lights, Granite Fireplace

### Bathurst/Mcclellan


**$539,000**
Gorgeous Corner Home 4 Bdrms,Double Door Entry,2875 Sqft. Fabulous Layout,Lots Of Upgrade,Hardwood Floor On Main Floor

### Taunton & Thickson


**$277,900**
3 Yr. Brick Tormina Home. North Whitby Crt Location. Ceramic Entrance Hall & Kitchen & Dinette. Note Large Br. Sizes

### Vipond / Ashburn


**$319,900**
Absolutely Beautiful Home With Many Upgrades.2200 Sq.Ft.Solid Brick,4 Bdrms.Fabulous Open Concept.

### Markham/Denison


**$333,000**
Very Well Kept And Spacious Home, Close To All Amenities, All New Broadloom On 2nd Floor, Shining Hardwood On Ground Floor

### Markham/High Glen


**$349,800**
Excellent & Convenient Location In Markham,Walk To Elem & High Schools,Yrt,Ttc,Masjid & Church,Canadian Tire,Future Shop, Costco,Macdonal,Tim Horton

### O'connor/St. Claire



**$2,500,000**
Free Standing Building Total Approx. 22,000 Sqft. Completed With New Window Located In East York Busy High Demand Area. Excellent

## *New Retail/Restaurant Units Available for SALE/LEASE*

### Hwy7/Leslie St



**$74,900** Plus Stock
Unique Cafe With Fast Food Take-Out And Catering Arrangement. Sit-In Fully Equiped Restaurant. Front Stree Exposure. Busy Commercial Area.

### Finch/Middlefield


**$449,000** Plus Stock
Very Well Established Convenience + Supermarket. Great Family Business At Well Known Location.Lots Of Merchandise.



digi Media Creations - 416.467.4952

# Elaguppillai (Mike) Srinathan, B.Sc.
Sales Representative

## Direct: 416.276.1225
esrinathan@trebnet.com

HOMELIFE HIGHER STANDARDS

**HOMELIFE/GTA Realty Inc.** 1711 McCowan Rd., Suite 206, Toronto, ON M1S 3Y3

## மேலைத் தேசத்தில்
## கீழைத் தேசத்து வாசனைகள்...

# Niru BRAND®

## எமது புதிய அறிமுகங்கள்




**Improted & Marketed By:**

**NIRU ENTERPRISES INC.**
40 Minuk Acres Scarborough.
Ontario. Canada, M1E 4Y6
Tel: 416-750-1976
Fax: 416-750-8779
www.niru.com

**NIRU(EUROPE) LTD.**
Unit 11, Mitcham Insustrial Estate,
85, Streatham Road, Mitcham
Surrey, CR4 2AP. U.K
Tel: +44 208 640 8228
Fax: +44 208 640 8312

பழவகைகளில் அதிகமாக உடம்பிற்கு தேவையான மாச்சத்து, புரதச்சத்து, தாதுப்பொருட்கள் (Minerals), உயிர்ச்சத்துக்கள் (Vitamins) சகலதும் இருப்பதாலும் அதிக நார்ச்சத்தும் இருப்பதாலும், இவை ஆரோக்கிய உணவாகக்கருதப்படுகிறது. உடம்பில் கெட்ட 'கொலஸ்ரெறோள்' (Bad Cholesterol-LDL) சேராது இருப்பதற்கும், உடம்பில் புற்று நோய்வராது தடுப்பற்கும், புற்றுநோய் உள்ளவர்களை குணப்படுத்தவும் (To Prevent and Cure Cancer) இன்றைய விஞ்ஞான ஆராட்சியாளர்கள் அதிகமான பழ உணவை உண்ணும்படி அறிவுறுத்துகின்றனர். எமது மூதாதையர்களாகிய சித்தர்களும், யோகிகளும் பழவகையை மட்டும் உணவாக உண்டு ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள் என்று புராதன கதைகளை கேட்டிருக்கிறோம். அது சாத்தியம் என்று இன்றைய விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எனவே இந்த பழவகை பற்றி அறிவது முக்கியமாகிறது.



அப்பிள் பழம் (Apples) - முற் காலத்தில் சொல்லி வைத்தார்கள் 'தினம் ஒரு அப்பிள் டாக்டரை உன்னிடம் வராது தடுக்குமென்று' (An Apple a day keeps the doctor away!). இந்த அப்பிளின் தசையிலும் இதன் தோலில் ஓர் அற்புதமான ஊக்கு சத்து (Enzymes) இருக்கிறது. அதை 'குவேசெரின்' (Quercetin) என்பர். இது உடம்பில் பழுதடைந்த பிராணவாய்வு கலன்கள் உடம்பின் நற்கலன்களை தாக்கி அழிக்காது தடுக்கவல்லவை (Antioxidant). இது நல்ல கலன்களை எது சக்தியும் அழித்து புற்றுக்கலன்களை உருவாக்காது தடுக்கவல்லது. இது இருதய நோயைமட்டும் தடுப்பதன்றி உடம்பில் ஏற்படும் புற்று நோய் (Cancer) புற்றுக்களை பரவாது தடுக்கவல்லது. இந்த புற்றுக்கலன்களை 'கியூசெற்றின்' (Quercetin) ஊக்குவியுடன் சேர்த்ததும் அந்த புற்றுக்கலன்கள் (Carcinogen) பரவி விரிவடையாது கட்டுப்படுத்துகிறது. இந்த 'கியூசெற்றின்' அப்பிளில் அதிகம் உண்டு. இந்த அப்பிளில் இருவகை நார்சத்து இருக்கின்றன. அவையாவன கரையும் நார்ச்சத்து, கரையாநார்ச்சத்து (Soluble and insoluble Fibres). இந்த கரையாத நார்ச்சத்து குடலில்

# நோய் தீர்க்கும் பழங்கள்

'டைவேரிகுலைரிஸ்' என்னும் சிறுபைகளும், பெருங்குடல் புற்றுநோயும் (Colonic Cancer) வராது தடுக்கவல்லது. இந்த கரையா நார்ச்சத்து அப்பிளின் தோலிலேயே உள்ளது. எனவே நன்கு கழுவியபின் அப்பிளை தோலுடனேயே உண்பது நற்பலன் தரும்.

கரையும் நார்ச்சத்தும் 'பெக்ரின்' (Pectin) அப்பிளின் தசையில் உள்ளது. இது எடைகுறைவதற்கு (For Losing Weight) உதவவும், கெட்ட 'கொலெஸறோலை' (Bad Cholesterol.LDL) குறைக்கவும் செய்கிறது. இந்த 'பெக்ரின்' நீரிழிவு நோயையும் (Diabetis) கட்டுப்படுத்தவல்லது என்று தமது அறிக்கையில் குறிப்பிடுகிறார். இந்த அப்பிள் நன்றாக தவிட்டு நிறமாக இருப்பதையே தேர்ந்தெடுத்தல் உத்தமம். அப்பிள் பானங்கள் எதுவித நற்பலனையும் தருவதாக இல்லையென்றும், ஆனால் ஏனைய குளிர் பானங்களிலும் அப்பிள் பானம் ஓராளவு நன்மைதரும்.


டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், Ph.D
Holistic Practitioner (Canada)
Nutrition & Fitness (Canada)
'யோக சித்தர்' வவுனியா, இலங்கை -
Tel. - 416.291.3022 /E.Mail - DRVPS@Hotmail.com


'அப்பிறிகொற்' (Apricots) - இந்த அப்பிறிகொற் அதிக 'கறரினோயிட் "Carotenoid' என்னும் ஊக்குச்சத்து அதிகம் உள்ளது. இது இருதய நோய்களை தடுக்கவும், குணமாக்கவும் வல்லவை. இந்த பழத்தில் 'லைகோபீன்' (Lycopene) கெட்ட கொலெஸ்ரெறோளை நாடிகளில் படியாது தடுத்து இருதயநோயைத்தடுக்க வல்லது. இதில் 'பீரா-கறரின்' (Beta-Carotene) உள்ளது. இந்த பீரா கறரீனில் (Beta-Carotene) அதிக ஜீவசத்து 'ஏ' (Vitamin A) உள்ளது. கண்களைச்சூரியக்கதிர் தாக்கும் பொழுது அங்கு உருவாகும் கெட்ட பிராணவாயு கூறுகள் கண்களின் பார்வையைத்தாக்கி நாளடைவில் 'கற்றறாக்ற்' (Cataract) என்னும் கண்கள் தடிப்படையும் நோயை உருவாக்கிவிடும். இதை இந்த ஜீவசத்து 'ஏ' தடுக்கிறது. இதை உருவாக்கும் 'பீரா-கறோரின்' இந்த 'அப்பிறி கோரில்' அதிகம் உள்ளது. இதை உண்பதால் ஒருவருக்கு தினம் தேவைப்படும் ஜீவசத்து 'ஏ'யின் 55 சதவீதம் உடம்பில் சேர்கிறது. இத்துடன் இதிலுள்ள நார்ச்சத்து உடம்பின் எடையைக்குறைக்கவல்லது.

'அவோகடோஸ்' (Avocados) - இது நாம் வழமையாக அழைக்கும் 'பட்டர் புறுற்' (Butter Fruit) ஆகும். இந்த அவோகடோஸ் பழத்தில் அதிக கொழுப்பு உண்டு. ஆனால் இந்தக்கொழுப்பு 'மொனோ சற்சுறேற்றட்' (Mono Saturated Fat) நல்ல கொழுப்பாகும். இது உடம்பிலுள்ள கெட்ட 'கொலெஸ்றோளை' (Bad LDL Cholesterol) அகற்றி அதை நாடிகளில் படியாவண்ணம் செய்யவல்ல 'கொலெஸ்ரெறோள்' (High Density Lipoprotein (HDL good cholesterol) ஆகும். இதன் நற்பயனால் இரத்த அழுத்தம் குறையும். அதிகநார்ச்சத்து உள்ள காரணத்தால் மலச்சிக்கலைத்தீர்க்கும். இது இரத்தத்தின் தடிப்பைக்கூட்டும் 'ர்றைகிழிசறைட்' (Triglycerides) என்னும் நச்சுப்பொருளையும் நீக்கவல்லதுடன், சலரோகம் உள்ளவர்களுக்கு உடம்பில் உள்ள 'ஓலீக் அசிட்' (Oleic Acid) என்னும் தடிப்பற்ற கொழுப்பைக்கூட்டி சலரோகத்தை (Diabetes) கட்டுப்படுத்தவல்லது. உடம்பிற்கு கொழுப்பு அவசியமான ஒரு சத்து. இது தினம் 30 சதவீதம் உணவில் இருக்கவேண்டியது அவசியம்.



உடம்பிலுள்ள சகல கலன்களின் தோல்கள் (Cell Covers) கொழுப்பால் உருவாகிறது. எனவே கொழுப்பின்றி எந்த அணுக்களும் (கலன்கள்) உடம்பில் இருக்கமுடியாது. எனவே நல்ல கொழுப்பு உடம்பின் சாதாரண நிலைக்கு அத்தியாவசியம். இந்த பழத்தில் அதிக தாதுப்பொருளாகிய 'பொற்ராசியம்' (Potassium) உள்ளது. இது இருதயத்திற்கு மிக அத்தியாவசியம். இது உடம்பில் அதிக உப்பை அகற்ற வல்லது. இதில் ஜீவசத்து 'போலிக் அசிட்' (Folic Acid) உள்ளது. 'இதனால் இரத்தசோகை (Anemia) நீங்குவதுடன், மூளை வளர்ச்சியும், பிறப்பில் குழந்தைகளுக்கு ஏற்படும் பிறப்பு குறைபாடுகளும் நீங்கும். நரம்பு மண்டலம் பலப்படும்.






KV TRUCK DRIVING CENTER

6 கிழமைகளில் நீங்களும் கனரக வாகன சாரதி ஆகலாம்

A C D Z வாகன சாரதி அனுமதி பத்திரங்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படும்.
ஒவ்வொருவருக்கும் தனித்தனியான பயிற்சிகள் வழங்கப்படும்.
உங்கள் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்படும்.
பயிற்சியின் முடிவில் உடனடி வேலைவாய்ப்புக்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.

பயிற்சி முழுவதற்குமான கட்டணம் $1699.00 மட்டுமே

CANADA & USA
பெருந்தெருக்களில் பயிற்சி வழங்கப்படும்

* 365 LEARNING PERMIT, * LOG BOOKS,
* AIR BREAK (Z) * DANGEROUS GOODS,
* BORDER CROSSING

WELFARE & UNEMPLOYMENT
இல் இருப்பவர்களுக்கு இலவச பயிற்சி வழங்கப்படும்.

உங்கள் வசதிக்கேற்ப வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சி வழங்கப்படும்.

அழையுங்கள்: கிருபா
647-274-0300 / 647-428-6988
Fax: 647-428-6989
visit: www.kvtrucking.com
805 MIDDLEFIELD ROAD , UNIT - 202, SCARBOROUGH, ONTARIO.
(Middlefield & McNicoll)



mhc

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# OPENING VERY SOON

**OVER 80% SOLD**

**Only few units available for lease or sale**




For further information please call:

**416.321.6969**

**www.gta square.ca**

# இராமேஸ்வரம் - புண்ணியஸ்தலம்

## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்-21



இந்தியாவின் மிகப் புராதனமான, பெரிய புனித யாத்திரைத் தலங்களில் ஒன்று இராமேஸ்வரம். பிரசித்திபெற்ற இராமநாதசுவாமி கோவில், கடலுக்குள் இரண்டரை கி.மீ. தூரம் கட்டப்பட்டிருக்கும் பாம்பன் பாலமும் ரயில் பாலமும், சுற்றிலும் கடல் நீர், அதில் ஆங்காங்கே தெரியும் குட்டி குட்டித் தீவுகள், மணல் மேடுகள், இதமான சூரிய வெப்பம்... என மனதுக்கும் கண்ணுக்கும் விருந்தளிக்கும் ஊர் இராமேஸ்வரம் தீவு. சுகவாசத் தலமும் கூட இந்தத் தீவு. இங்கு தங்கி கடல் நீராடுவது தனிச் சிறப்பு.

மதுரையிலிருந்து 160 கி.மீ., இராமநாதபுரத்திலிருந்து 54 கி.மீ., மண்டபத்திலிருந்து 19 கி.மீ. தொலைவில் கடலுக்குள் உள்ளது இராமேஸ்வரம் தீவு. இராமநாதபுரம் கடந்து, கடற்கரையை நோக்கிச் செல்லும் சாலையில் கொஞ்ச தூரம் சென்றால் மண்டபம் வரும். அங்கிருந்து கடலின் குறுக்கே செல்லும் ரயில் பாலமும், பேரூந்துகள், கனரக வாகனங்கள் செல்ல கட்டப்பட்டுள்ள பாம்பன் பாலமும் இராமேஸ்வரத்தை கடற்கரையுடன் இணைக்கின்றன. இந்தப் பாலங்கள் அல்லது படகு மூலமாகத்தான் இராமேஸ்வரம் தீவிற்கு செல்லவேண்டும். இராமேஸ்வரம் ஓர் இனிய அனுபவம் என்றால், இராமேஸ்வரத்தை நோக்கிச் செல்லும் பயணம் அதனைவிட இனிய அனுபவம். பாம்பன் பாலத்தின் மொத்த நீளம் 2345 மீட்டர். இராமேஸ்வரத்தை நோக்கி சுற்றுலாப் பயணி-களை ஈர்க்கும் சிறப்புகளில் பாம்பன் பாலமும் ஒன்று. இப்பாலத்தின் அழகையும் அமைப்பையும் காண, ரயிலில் சென்றால் தான் நன்றாக இருக்கும். இந்த பாலத்தின் மேல் சென்று நடுவில் நின்று பார்த்தால், கடலுக்குள் செல்லும் ரயில் பிரமிப்பாக இருக்கும்.



ஊரும், ஊரைச் சுற்றிய மணல் மேடுகளுமாக மொத்தம் 52 ச.கி.மீ. பரப்பளவு மட்டுமே கொண்ட குட்டித் தீவு இராமேஸ்வரம். விஷ்ணுவின் சங்கு போன்ற அமைப்பைக் கொண்ட இந்த சிறு தீவு, காசிக்கு இணையாகக் கருதப்படும், இந்தியாவின் மிகப் பெரிய புனித யாத்திரை ஸ்தலம் என்பது தான் விசேசம். இங்குள்ள இராமநாதசுவாமி திருக்கோயில் மூர்த்தி மற்றும் தீர்த்தம் விசேசங்களைப் பெற்றது. இராமாயண இதிகாசக் கதையை ஒட்டி எழுந்த கோயிலாகும் இந்த இராமநாதசுவாமி கோவில். இராவணனைக் கொன்ற பாவம் நீங்க, ராமன் இக்கோயிலை எழுப்பினார் என்பது ஐதீகம். இத்தலத்தில் எழுந்தருளியுள்ள அம்பிகை, பர்வதவர்த்தினி என்றும் மலைவளர் காதலி என்றும் அழைக்கப்படுகிறாள். இங்கு உள்ள லிங்கம், ராமர் பூசை செய்வதற்காக கைலாசத்தில் இருந்து அனுமானால் எடுத்து வரப்பட்டது என்றும் கூறுப்படுகிறது. லிங்கத்துக்கு காசி விசுவநாதர் என்று பெயர். தினமும் விடியற்காலையில் இதற்குப் பூசை நடபெறுகிறது.

இராமர், சீதை, லட்சுமணர், அனுமன் ஆகியோருக்குத் தனித்தனியாகவும் ஆலயங்கள் இங்கு உள்ளன. இராமேஸ்வரத்தில் 64 தீர்த்தங்கள் உண்டு. இதில், 24 தீர்த்தங்கள் மிகச் சிறந்தவை. இவை எல்லாமே கிணறு வடிவத்தில் உள்ளன. அனைத்திற்கும் மேலான கோடி தீர்த்தம். பக்தர்கள் கடலில் நீராடும் இடத்திற்கு அக்னி தீர்த்தம் என்று பெயர்.

பல தலைமுறையாக இலங்கை அரசர்களாலும், இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களாலும், தனிப்பட்ட பலராலும் இராமேஸ்வரம் கோயிலின் பல பகுதிகள் கட்டப்பட்டுள்ளன. இதைக் கட்டி முடிக்க 350ஆண்டுகள் ஆகியுள்ளது. திராவிடக் கலையின் மேம்பாட்டிற்கு, இக்கோயில் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. சுமார் 15 ஏக்கர் நிலப்பரப்பில் எழுந்துள்ள இந்த ஆலயத்தின் மூன்றாவது பிரகாரம் உலகிலேயே மிக நீளமான பிரகாரமாகும். இந்த ஆலயத்தில் உள்ள பிரகாரங்களின் மொத்த நீளம் 4000 அடிகள். இந்தப் பிரகாரங்களில் சிறந்த சிற்ப வேலை மிகுந்த தூண்கள் உள்ளன. வெளிப் பிராகாரத்தில் மட்டும் 1200 தூண்கள் உள்ளன. 1897ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27ஆம் தேதி சுவாமி விவேகானந்தர் இராமேஸ்வரம் வந்ததை நினைவுபடுத்தும் வகையில் நினைவுத் தூண் ஒன்று கட்டப்பட்டுள்ளது.



**வழிப்போக்கன்**

இராமநாதசுவாமி திருக்கோயிலுக்கு வடக்கே, 2 கி.மீ. தொலைவில் உள்ள மணற்குன்றின் உச்சியில் ராம் ஜரோகா ஆலயம் உள்ளது. இந்த இடத்தில் இராமன் பாதங்கள் பதிந்துள்ளன. இதற்கு மலரும், குங்குமமும் வைத்து வழிபாடு செய்கிறார்கள். இந்தக் குன்றின் மீது நின்று பார்த்தால், இராமேசுவர நகரின் அழகிய தோற்றத்தையும் தீவின் சில பகுதிகளயும் கண்டுகளிக்க முடியும்.

குறுசடத் தீவு, நல்லதண்ணித் தீவு, உப்புத் தீவு, தலயாரித் தீவு, வெள்ளித் தீவு, முள்ளித் தீவு, முயல் தீவு, மண்ணளித் தீவு, பூமுறிச்சான் தீவு, சிங்களத் தீவு, புல்லித் தீவு, மணலித் தீவு, முளித் தீவு, வாளத் தீவு, அப்பாத் தீவு, ஆனப்பாறத் தீவு, சுளித் தீவு, கச்சத் தீவு... என இராமேஸ்வரம் தீவைச் சுற்றிலும் 16 குட்டி குட்டித் தீவுகள் உள்ளன. பல கடல்வாழ் நுண்ணுயிர்கள் இத்தீவுகளில் காணப்படுகின்றன என்பதால், கடல் சார்ந்த ஆராய்ச்சிகளுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் இத்தீவுகள் கண்ணுக்கும் காட்சிக்கும் விருந்தாக அமையும். இந்த எல்லாத் தீவுகளுக்கும் சுற்றுலாப் பயணிகள் படகுகள் மூலம் சென்று வரலாம். இதில் குருசடத்தீவு மிக முக்கியமானது. பவளப் பாறைகள் சூழ்ந்துள்ள இந்தப் பகுதியில் கடற்பாசி, நட்சத்திர மீன்கள், நண்டுகள், வாளைகள், கடற்பஞ்சு முதலான கடல்வாழ் உயிர்கள் எண்ணற்ற வகைகளில் காணப்படுகின்றன. குறுசடத் தீவைச் சுற்றிலும் “டொல்பின் கடல் மீன்கள் ” குதித்து விளையாடுவது காண்பதற்கினிய காட்சியாகும். பவளப் பாறைகள், முத்துச் சிப்பிகள், அருமையான சில கடற்செடிகள் போன்றவை திரள் திரளாகச் செழித்துள்ள இனிய காட்சி, “தாவர இயல் வல்லுனர்களின் சொர்க்கம்” என்னும் பட்டத்தை குறுசடத் தீவிற்குக் கொடுத்துள்ளது. இங்கு தமிழக அரசின் மீன் ஆய்வு நிலையமும், உயிரியல் மாணவர் பார்வைக் கூடமும், சிறு விடுதியும், முத்துச் சிப்பி வளர்ப்பு நிலயமும் உள்ளன. குறுசடத் தீவிலிருந்து 2 கி.மீ. தொலைவில் கச்சத் தீவு உள்ளது. இலங்கைக்கும் இந்தியாவிற்கும் மையமாக உள்ள கடல் திட்டுப் பகுதிதான் இந்த கச்சத் தீவு. இங்கு மக்கள் வசிப்பதில்லை. புனித அந்தோனியார் மாதா கோயில் ஒன்று கச்சத் தீவில் உள்ளது. இந்தப் பகுதிகளில் அதிக அளவு மீன் கிடைக்கிறது. இடைக்காலத்தில் சேதுபதியினர் இங்கு முத்துக்குளித்து வந்துள்ளனர்.

இராமேஸ்வரம் மக்களின் முக்கியமான தொழில் மீன் பிடிப்பது தான். இராமேஸ்வரத்தைச் சுற்றிலும் கடல் நீரில் ஏராளமான மீன்கள் உள்ளன. எனவே, தென்னிந்தியாவின் மிகப் பெரிய மீன்வள மையங்களில் இராமேஸ்வரமும் ஒன்றாக உள்ளது. இந்தியா - நோர்வே மீன் வளர்ப்புத் திட்ட நிலையம் மண்டபத்தில் இயங்குகிறது. கடலில் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டே வேலைப்பாடுகள் நிரம்பிய அழகிய பொருட்களைச் செய்வதில் இத்தீவு மக்கள் சிறந்து விளங்குகிறார்கள்.

இராமேசுவரத்திலிருந்து 20 கி.மீ தூரத்தில் உள்ள தனுஷ்கோடி பிரசித்திபெற்ற ஸ்தலம். வில்லின் நுனியை இராமன் ஊன்றியதால் தனுஷ்கோடி என்ற பெயர் ஏற்பட்டது என்கிறார்கள். தனுஷ் என்றால் வில், கோடி என்றால் முனை என்று பொருளாகும். இங்கு நீராடுவது தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். கங்கக் கரையில் உயிர் விடுவதும், நர்மதைக் கரையில் நோன்பு இருப்பதும், குருசேத்திரத்தில் அன்பளிப்பு செய்வதும் புண்ணியமான செயல்களாகக் கருதப்படுகின்றன. இம்மூன்றையும் ஒருங்கே

தொடர்ச்சி 16ஆம் பக்கம்


**ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது**

**Future Investment**



WaterFront
Lake Simcoe
Cottage Detached Big Lot's
$225,000

**BANQUET HALL**
5 Split party hall
27,000 sqft.
975 seats-at HWY 400
80 parking
3 split 500/300/200

ஏக்கர் நிலம் வருமானத்துடன்
Beach, Cottage

வீடும் வியாபாரமும் *Business Zoning*

Metal Recycling
**Auto Body Shop**
Yunk Yard 2 Acres land with
**House and Basesemt**
**PAINT AUTO BODY SHOP**
**2300 SQFT. WITH RUNNING BUSINESS- KIPLING & STEELES**

**Mechanic Shop**
with house + Car
Dealer shop in
Scarborough
**$400,000**

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு
வேலைவாய்ப்பு அழையுங்கள் - Sam Sitham (Sales Rep)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

MARKHAM & LAWRENCE - Big Bungalow bsmt For Rent with Sep. entrance. Close to Cedabrae Mall.

# கொடிய நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு காப்புறுதி நிவாரணம்

## வினா விடை தொடர் -1-

**1. கொடிய நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கும் "காப்புறுதி நிவாரணம்" என்றால் என்ன? அதன் விதிகள், யாது?**
**எத்தகைய நோய்கள் இங்கு கொடிய நோய்கள் என கருதப்படுகின்றன?**

தற்போது வளர்ந்து வரும் மருத்துவ விஞ்ஞான உலகின் கருணையினால், கொடிய நோயினால் பாதிக்கப்பட்ட எல்லோரும் உடனடியாக உயிர் இழப்பினை எதிர்கொள்வதில்லை. வழமையான சிகிச்சைகள், பாரிய சத்திர சிகிச்சைகளை தொடர்ந்து பல வருடங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறு தொடர்ந்து உயிர் வாழ்பவர்கள் தங்களின் அன்றாட வருமானத்திற்காக ஓடுகின்ற நிலைமையில் இருந்து சற்று மாறுபட்டு ஓய்வு நிலையில் வாழ்வதற்காக ஆரோக்கியமாக வாழும் காலத்தில் மிகப் பெரிய தொகைக்கு காப்புறுதி நிறுவனம் ஒன்றுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் இருந்து நோய் வாய்ப்பட்ட காலத்தில் பெற்று கொள்ளும் நிவாரணமே இதுவாகும்.

தென் ஆபிரிக்காவினை பூர்வீகமாக கொண்ட, உலக புகழ் பெற்ற, முதன் முதலில் இருதய மாற்று சத்திர சிகிச்சையினை உலகில் அறிமுகப் படுத்திய நிபுணர் என பெயர் கொண்ட டாக்டர். மறியஸ் பேர்னாட் (Dr Marius Barnard) அவர்கள், சில ஆபத்தான நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள், பாரிய சத்திரசிகிச்சைக்கு உட்பட்டவர்கள் தங்களின் அன்றாட வருமானத்திற்காக ஓய்வு இன்றி அதீத மன உளைச்சல்களினூடாக ஓடுகின்ற பரிதாப நிலையில் இருந்து விடுபட தீர்வு எது என சிந்தித்தார்.

மருத்துவ உலகில் தாம் தினம்தினம் கண்டு வரும் அவரது சிந்தனையில் எழுந்த முடிவும், அவர் முயற்சியும் சர்வதேச ரீதியில் மேற்கொண்ட சிபார்சினாலும் உருவாக்கப்பட்டதே இக் கொடிய நோய்களினால் பாதிக்கப்பட்டவர் களுக்கான காப்புறுதி திட்டம் (Critical Illness Insurance) ஆகும். முதன் முதலில் தென் ஆபிரிக்காவில் தொடங்கி ஜப்பான், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, அயர்லாந்து ஆகிய நாடுகளில் உள்ள காப்புறுதி நிறுவனங்களினால் சந்தைபடுத்தப்பட்டு, தற்போது கனடாவில் உள்ள ஏராளமான காப்புறுதி நிறுவனங்கள் இவ் ஒப்பந்தங்களை சந்தைப்படுத்துகின்றன. காப்புறுதி நிறுவனங்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி மிக பெரிய நிவாரணம் வழங்கும் கொடிய நோய்கள் பின்வருமாறு.

- இருதய நோய் (Heart Attack)
- பாரிச வாதம் (Stroke, Paralysis)
- சிறுநீரகம் செயல்படாமை (Kidney failure)
- மூளையில் கட்டி வளர்தல் (Brain Tumor)
- இருதய குருதி சுற்றோட்ட தடை நீக்கும் சத்திர சிகிச்சை (Coronary Artery Bypass Surgery)
- புற்று நோய் (Cancer)
- கண் பார்வை இழத்தல் (Blindness)
- காது கேளாமை (Complete Deafness)


சிவ. பஞ்சலிங்கம் B. Com,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான
ஆலோசனைகளுக்கு:
416.321.0999


- வாய் பேச முடியாத நிலைமை (Loss of Speech)
- உறுப்புகள் மாற்றங்கள் (Major organ Transplant)
- எய்ட்ஸ் நோய் (Occupational HIV)
- இருதய வால்வு மாற்றங்கள் (Heart value Replacement)
- உடல்ரீதியில் எரிந்த நிலைமை (Sever Burn)
- அன்றாட வாழ்வில் இயங்க முடியாத நிலைமை (Loss of Independent Existence)
- சில நரம்பியல் நோய்கள் (Parkinson Disease, Alzheimer)

மில்லியன் டொலர்களுக்கோ அல்லது பல இலட்சம் டொலர்களுக்கோ இக்கொடிய நோய்களுக்கான காப்புறுதி ஒப்பந்தம் செய்து வைத்திருப்பவர் மேற்குறிப்பிட்ட நோய்களில் ஏதாவது ஒன்றினால் பாதிக்கப்பட்டு இருந்தால் பாதிக்கப்பட்டு சுமார் முப்பது நாட்களின் பின்பு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட இம்மிகப்பெரிய நிவாரணத்தினை பெற்று அத்தொகையில் இருந்து ஒரு மாத வருமானத்தினை உருவாக்கி சற்று ஓய்வு நிலையில் வாழலாம்.

இது தவிர சில காப்புறுதி நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட நோயாளிகள் ஏதாவது விசேட சிகிச்சைக்காகவோ அல்லது மேலதிக சத்திர சிகிச்சைக்காகவோ கனடாவில் காத்திருக்கும் நிலையில் இருந்து மாறி உலகில் எந்த நாட்டில் போய் பெற்று கொள்ளும் சிகிச்சைகளுக்குரிய செலவுகளுக்கும் இந் நட்டஈட்டு தொகைக்கு மேலாக ஒரு நிவாரண தொகையினை இவ் ஒப்பந்தத்தில் இருந்து வழங்குகின்றது.

(இதனை ஆங்கிலத்தில் "Surgery Advance Benefit" அல்லது "Illness Assist Benefit" என குறிப்பிடப்படும்.

ஆனால் ஒரு முக்கியமான விடயம்!
இக்கொடிய நோயால் பாதிக்கப்பட்டு நிவாரணம் கோரும் போது, இந்நோயின் தன்மை எப்படி இருக்க வேண்டும் என்பது ஒப்பந்தங்களின் வரைவிலக்கணத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

உதாரணமாக "சிறுநீரகம் செயல்படாத நிலைமைக்கு" ஆளப்பட்டவர்கள் இரு சிறுநீரகங்களும் செயல்படாத நிலையில் சிறு நீர்சுத்திகரிப்புக்கு (Dialysis) செல்லும் நிலையில் இருத்தல் வேண்டும். ஒரு சிறு நீரகம் மட்டும் பாதிக்கப்பட்டவர் நட்டஈடு கோரமுடியாது.

இது போல "கண்பார்வை" இழந்தவர் ஒருவர் நட்டஈடு கோரும் போது இரு கண்களும் நிரந்தரமாக இழந்தவராக இருத்தல் வேண்டும்.

ஒரு கண் இழந்தவர் அல்லது பார்வை குறைபாடு உள்ளவர் நட்டஈடு கோர முடியாது. ஒப்பந்தங்களில் மருத்துவ சொல் அகராதிகளுடன் நட்டஈடு கோரும் ஒவ்வொரு நோயும் இத்தகைய குறிப்பிடப்பட்ட வரைவிலக்கணத்தினுள் இருத்தல் வேண்டும் என வரையறை செய்யப்பட்டுள்ளது.

ஆனால் இங்கு ஒரு முக்கியமான விடயம் கொடிய நோய் என்பது மருத்துவர் களினால் உறுதி செய்யப்பட்டு ஒரு கிழமை அல்லது இருகிழமையினுள் உயிர் இழப்பு நடந்தால் இவ் ஒப்பந்தத்தில் இருந்து நட்டஈடு கிடைக்கமாட்டாது. இதுவரை காலமும் மாதா மாதம் செலுத்திய பணத்தினை மட்டும் மொத்தமாக வட்டி எதுவும் இல்லாது திருப்பி வழங்குவார்கள்.



மருத்துவர்களினால் உறுதி செய்யப்பட்டு ஒரு மாதத்தின் பின்பு உயிர் இழப்பு நடந்தால் மட்டுமே நட்ட ஈடு கிடைக்கும்.

ஒப்பந்தத்தில் சேரும்போது மருத்துவ புலனாய்வுகள் ஆழமாக பரிசீலனை செய்வார்கள். பெற்றோர், சகோதரர்கள் ஆகியோரின் மருத்துவ வரலாறுகளும் (Family Medical History) பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும். அதாவது ஆரோக்கியமான நிலையில் இருக்கும் போது சேர்ந்து கொள்ள வேண்டும். உடல் ஆரோக்கியம் குன்றிய நிலையில் ஒப்பந்தத்தில் சேர்வது என்பது சிரமமான விடயமாகும்.


**SAMI DAYCARE**



* மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
* ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
* காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை * மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை * சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $75.00

**Summer Daycare - $60 with food & Everything**
தினசரி நடவடிக்கைகள் * உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா.

#7 Birchcrest Court (Finch / Warden) Mrs.S.J. சௌந்தரநாயகம் 416-502-3033


### வியாபாரிமூலை நெல்லண்டை மக்களின் ஒன்று கூடல்

வியாபாரி மூலை நெல்லண்டை மக்களின் எட்டாவது ஒன்று கூடல் ஆவணி மாதம் ஐந்தாம் திகதி ஞாயிற்கிழமை மிலிக்கன் பாக்கில் ஏரியா "C" யில் காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகும். கனடா வாழ் வியாபாரிமூலை நெல்லண்டை மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

தொடர்புகட்டு - 416.391.3237, 416.282.3584, 416.492.2097

### ஒன்று கூடல்

முதன் முதாலாக யாழ்ப்பாணம் ஜயனார் கோவிலடி (வண்ணர்பண்ணைக்கு அருகில்) வாழ் கனடா மக்கள் ஒன்று கூடல் ஒன்றை Markham – Miline Park –Mapleview A (Just South of Hwy 7, On McCowan) இல் August 19, 2007 இல் நடத்துகின்றனர்.
ஜயனார் கோவிலடி கனடா வாழ் (ரொரண்ரோ பெரும் பாகம்) மக்கள் அனைவரையும் கலந்து உங்கள் உறவினர்கள், நண்பர்களை சந்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

உங்களது வருகையை தேவன் 416-491-8326 என்ற தொலை பேசிக்கு அழைத்து, ஆவணி 12ந் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு: கௌசி - 416-450-6833, 905-887-7457
வெற்றி வேல் - 416-831-8549 (கைத் தொலைபேசி) 416-283-6651


EXPERT
BUILDING INSPECTIONS LTD

"Dedicated to Expert, Honest & Independent Inspections"

**Tel: 905 940 0811 Fax 905 940 6108**
**Toll Free 1 866 373 3315**

- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

**www.expertinspector.com**

- Tough and Thorough Inspections by **University of Toronto** educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act–Bill 158 and full members of **ASHI** and **CAHPI**–Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER
CAHPI Ontario

# வீடு சேராத வேளாண்மைகள்

## ஓடும் நீர் உறைவதில்லை 41

'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே!' என்பதற்கு வேளாண்மை ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. நிலத்தைப் தெரிவுசெய்வதில் இருந்து ஆரம்பிக்கும் இந்த முயற்சி பல்வேறு படிமுறைகளூடாக, கடின முயற்சியின் விலையாக அதன் அறுவடைக்காலம் என எதிர்பார்க்கப்படும் காலம் வரை தொடர்கிறது. இந்தத் தொடர்ச்சியான முயற்சியின் எதிர்ப்பார்ப்பு சிறந்த அறுவடையாக அமைந்தாலும் அந்த எதிர்பார்ப்பு உறுதிப்படுத்தப் படாததாகவே அமைகின்றது. இந்த இயல்பு விவசாயிகளின் வாழ்வியலின் ஒரு பகுதியாக அமைவதால் முயற்சியில் முழுநம்பிக்கையுடன் செயற்படுவது அவர்களது இயல்பாகவும் அதன் பெறுபேறு அவர்களிடத்து இல்லை என்பது பற்றிய உலகியல் உண்மையை உணர்ந்தவர் களாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறர்கள்.

வேளாண்மையின் ஆரம்பம் பொருத்தமான நிலப்பகுதியைத் தெரிவு செய்வதன் மூலம் ஆரம்பமாகின்றது. தெரிவு செய்யப்படும் நிலம் பயிர் செய்கைக்குரியதாக உள்ளதா என்பது முதலில் கவனத்திற்கு எடுக்கப்படுகிறது. முதன்முதலாக பயிர் செய்கைக்குத் தெரிவு செய்யப்படும் தரிசுநிலம், பயிர்ச்செய்கைக்காகப் பண்படுத்தவேண்டியதாக இருப்பதால் அதனைப் பண்டுத்தத் தேவையான கால அளவு, தேவைப்படும் ஆளணி, உபகரணங்கள் என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட நிலம் தரமானதாக இருப்பதுடன் பயிர்ச் செய்கைக்குத் தேவையான ஏனைய வசதிகள் - நீர்ப்பாசனம் போக்குவரத்து, பாதுகாப்புப் போன்ற பலகாரணிகளும் முக்கியமாகக் கவனத்தில் எடுக்கப்படுகின்றன. புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட நிலப்பரப்பில் உள்ள காட்டு மரங்கள், செடிகள், பற்றைகள் என்பனவற்றை அகற்றுவதும், ஆங்காங்கே புதர்களுக்குள் இருந்து வரும் பாம்புகள், தேள்கள் ஏனைய கொடிய விலங்குகளுக்கு முகம் கொடுத்து வெற்றி காண்பதும் சாதாரண நடவடிக்கைகளா கின்றன. அதாவது தெரிவு செய்யப்பட்ட நிலப்பரப்பின் மேற்பகுதியில் காணப்படும் தேவை யற்றவற்றை நீக்குதல் இந்த நடவடிக்கையாகும்.

அடுத்து, நிலத்தைப்பண்படுத்தும் முயற்சிகள் ஆரம்பமாகின்றன. இந்நடவடிக்கை யில் நிலத்தைக் கொத்துவதன்மூலம் அதன் ஆழம், மண்ணின் தரம் என்பன அறியப்படுவது டன் மண்ணுக்கடியில் உள்ள கற்கள், மரங்களின் வேர்கள் போன்ற பயிரிடப்போகும் தானியத்தின் விளைச்சலைக் குறைக்கும் அல்லது கட்டுப்படுத்தும் காரணிகளை அகற்றுவது ஆரம்பமாகின்றது. அதுமட்டுமன்றிச் சில இடங்களில் காணப்படும் பாறைகள் அகற்றப்பட முடியாததாக இருப்பின் அந்தப் பகுதியைத் தவிர்த்து விட்டு ஏனைய நிலப்பரப்பைப் பண்படுத்துவதும் இயல்பான நடவடிக்கையாகும். இவ்வாறு பல்வேறு படிமுறைகளூடாக நிலம் பண்படுத்தப்பட்டதும் பயிர்ச்செய்கைக்குத் தயாராக்கப்படுகின்றது.

பயிர்ச்செய்கைக்குத் தயாராகவுள்ள நிலத்தில் எந்தப்பகுதியில் எந்தப்பயிரைப் பயிரிடுவது என்று தீர்மானிப்பதுடன் விதைத்தல், நடுதல் என்பன ஆரம்பமாகின்றன. மண்ணின் வளம், பயிரின் காலஅளவு, நீர்பாசன வசதி என்பனவற்றைப் பொறுத்து அவை தெரிவு செய்யப்படுகின்றன. தெரிவு செய்யப்படும் பயிரினங்கள் சில விதைகளாகவும் சில கன்றுகளாகவும், வேறுசில கிழங்கு வகைகளாகவும் அமைகின்றன. இவை எவையாக இருந்தாலும் விதைக்கப்பட்ட அல்லது நாட்டப்பட்டவுன் விவசாயியின் முழுக்கவனமும் அதன் ஆரம்ப வளர்ச்சிக்குரிய பாதுகாப்பாக அமைவதை அவதானிக்கலாம். தானிய விதைகளாக இருந்தாலும் சரி, கன்றுகள், கிழங்குகளாக இருந்தாலும் சரி பறவைகளாலோ அல்லது விலங்கினங்களாலோ அழிக்கப்படாமல் இருப்பதற்கான பாதுகாப்பு முறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.



பாதுகாப்பு முறைகள் நடைமுறைப் படுத்தப்பட்டதும் பயிரின் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைப்பராமரிப்பு முறைகள் ஆரம்ப மாகின்றன. இங்கே மிக முக்கியமான ஒரு விடயத்தைக் கவனிக்கவேண்டும். ஒவ்வொரு பயிரினத்திற்கும் வெவ்வேறான அளவு பராமரிப்பு முறைகள் தேவைப்படுகின்றன. சிலவற்றுக்கு நீர் அதிகம் தேவைப்படும், வேறுசிலவற்றுக்குக் குறைந்தளவு நீர் அவசியமாகும். இவ்வாறு தேவையின் அளவைப் பொறுத்துப் பராமரிப்பு அளவும் முறையும் கொடுக்கப்படுகின்றன. இந்த அளவுகளும் முறைகளும் இயற்கையின் ஒத்துழைப்பின் அடிப்படை எதிர்பார்ப்புடன் ஒன்றிணைக்கப்படுகின்றன. இவ்வாறு மனிதனின் முயற்சியும் இயற்கையின் பங்களிப்பும் தொடர்ச்சியாக இணைக்கப்பட்டு இந்த வேளாண்மை முயற்சி முன்னெடுத்துச் செல்லப் பட்டாலும் விவசாயியின் முழுமையானதும் உறுதியானதுமான நம்பிக்கைதான் முடிவு உறுதிப்படுத்தப்படாத இந்த முயற்சியை முழுமனதுடன் முன் நகர்த்திச் செல்கின்றது. நடைமுறையில் முயற்சி நீதியானதும், நியாயமானதுமாக இருக்கும் போது அதன் பெறுபேறுகளும் அவ்வாறே அமைவதைக் காணலாம். இங்கு அதன் பெறுபேறுகள், வேளாண்மை விடயத்தில் பயிர்கள் நன்றாக வளர்ந்து எதிர்பார்த்ததைவிட அதிகளவு விளைச்சலைத் தந்திருந்தாலும் அதை அறுவடை செய்து வீடு சேர்ப்பதும் அதிமுக்கியமானதொரு நடவடிக்கைகள்யாகும்.

இப்போது நாம் வேளாண்மையில் இருந்து வாழ்வியலுக்கு வருவோம். வாழ்வியலுக்கும் வேளாண்மைக்கும் என்ன தொடர்பு என்று ஆச்சரியப்படாதீர்கள். வாழ்விய லும் வேளாண்மையே. எப்பொழுது நாம் இன்னொரு உயிரைப் பராமரித்தல், பாதுகாத்தல், நெறிப்படுத்தல் என்ற செயற்பாடுகளுக்கு வழிவகுக்கின்றோமோ அப்போதிருந்து நாமும் வாழ்வியல் விவசாயிகளே. இங்கு ஒரு விவசாயியின் அயராத உழைப்பும், ஒழுங்குபடுத்தப்பட்ட பராமரிப்பு முறைகளும் நமது வாழ்வியலில் தவிர்க்க முடியாததும் தவிர்க்கப்படக் கூடாததுமான அம்சங்களாகும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

முதலில் குடும்பம் என்ற உறவுமுறைதான் நாம் தெரிவு செய்யும் நிலம். கணவன் மனைவி என்ற பந்தத்துக்குள் நாம் உட்பட்டதும் உருவாக்கப்படும் இந்த தரிசுநிலம் குழந்தைகள் என்ற பயிரைப் பயிர்செய்வதற்கான நிலமாகப் பண்படுத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது. குடும்பம் என்ற ஆரம்ப காலத் தரிசு நிலம் நிலத்துக்குமேலேயும் நிலத்துக்கு கீழேயுமாகப் பல்வேறுபட்ட தேவையற்ற விடயங்களைக் கொண்டிருக்கும். அதாவது உளவியல் சம்பந்தமான இந்தத் தரிசு நிலத்தில் ஆடம்பரம், பகட்டு, போலிக் கௌரவம், பணம், கல்வி, சொத்து என்ற மேற்பரப்புக் குப்பைகளும், கற்களும், போட்டி, பொறாமை, தவறான பிடிவாதம், பொய், கடும்சொற்கள், தவறுகளை ஏற்றுக்கொள்ளமறுத்தல், இரக்கமின்மை, பழிசுமத்தல் போன்ற நிலக்கீழ் பாறைக்கற்களும் வேர்களும் ஒருவரை ஒருவர் மனம் நோகும் அளவுக்கு வார்த்தைகளால் தாக்குதல் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்து பழிவாங்குதல் போன்ற பாம்பு, பூச்சிகள், விலங்கினங்களும் அகற்றப்பட்டு இந்தத் தரிசு நிலம் குழந்தை என்ற பயிர்வளர்வதற்குத் தயார்படுத்தப்படல் வேண்டும். எனவே குடும்பம் என்ற நிலம் குழந்தை என்ற பயிருக்கு ஏற்றதாக அமைவது பெற்றோர் என்ற விவசாயிகளின் தவிர்க்க முடியாத பொறுப்பாகும்.

குடும்பம் என்ற நிலத்தில் குழந்தைகள் என்ற விதைகள் விதைக்கப்பட்டதும் அந்த விதைகளின் வளர்ச்சிக்கான ஆரம்பகால முழுமையான பராமரிப்பும் பாதுகாப்பும் பெற்றோர் களாகிய நமது முதன்மையான கடமை ஆகும். ஒரு குழந்தைக்கு அதன் வளர்ச்சிக் காலங்களில் தேவைப்படும் உடலியல் உளவியல் விடயங்களைத் தேவையறிந்து வழங்குவதும், அதன் வளர்ச்சிக்குத் தடையாகும் அல்லது ஆபத்தாகும் விடயங்களில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதும் ஒரு விவசாயி விதைக்கப்பட்ட விதைகளைப் பறவைகள் விலங்கினங்களில் இருந்து பாதுகாப்பது போன்றதாகும்.

அடுத்து பெற்றோராகிய விவசாயிகள் பிரதிபலன்பாராத கடின உழைப்புடன் முழுமையான நம்பிக்கையுடன் குழந்தைகளின் வளர்ச்சிக்காக ஒன்றிணைந்து செயற்படுதல் வேண்டும். கருத்து வேறுபாடுகளின்றி ஒருமித்த தீர்மானங்களே குழந்தைகளின் நேர்த்தியான உளவளர்ச்சிக்கான அடிப்படைகளாகும். குடும்பம் என்ற பந்தத்துக்குள் குழந்தைகளும் சரிசமமான உரிமையைப் பெறுவதால் கணவன் மனைவி இருவருக்குமிடையிலான வேறுபாடான கருத்துகளும் நடத்தைகளும் முற்றுமுழுதாக அகற்றப்படவேண்டும். ஒரு விவசாயியின் தவறான நடவடிக்கைகள் அவரது பயிரின் மீது பாதிப்பை ஏற்படுத்துவபோல் பெற்றோர்களது தவறான நடவடிக்கைகளும் தீர்மானங்களும் குழந்தைகளின் மனோநிலையில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

குழந்தைகள் வளர்ந்து வரும் காலங்களில் அவர்களது கற்கைகளின் அதிபெரும் பகுதி பெற்றோர்களின் நடத்தைகள் மூலமே பெறப்படுகின்றது. எனவே பண்படுத்தப்பட்ட குடும்ப உறவு குழந்தை களுக்கான சிறந்த கல்விக்கூடமாகின்றது. ஒரு சிறப்பான குழந்தையின் வளர்ச்சிக்கும் நெறிப்படுத்தலுக்கும் தரமான குடும்பம் என்ற நிலமும் தன்னலமும் பிரதிபலனும் பாராது பெற்றோர் என்ற தார்மீகப் பொறுப்பைச் சிறப்பாகக் கையாளுதலும் அடிப்படைகளாக அமைவது அவசியமானதாகின்றது. ஒரு விவசாயி சில சந்தர்ப்பங்களில் இயற்கையின் தாக்கத்திலிருந்து தனது பயிரைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பது போல் உதாரணமாக அதிக வெப்பமாக இருப்பின் அந்த வெப்பத்தின் தாக்கத்தைக் குறைப்பதற்கு நிழல் கூடங்களை அமைப்பது போல் குழந்தைகளும் புறச் சூழல்களின் பாதகமான தாக்கங்களினால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான நடவடிக்கை களை மேற்கொள்ளத் தகுதியுடையவராக இருத்தல் அவசியம். அப்போது தான் தரமான குழந்தைகளை உருவாக்க முடியும். எனவே விவசாயி, விவசாயத்திற்காகப் பண்படுத்தப்பட்ட நிலம், விவசாயியின் பராமரிக்கும், பாதுகாக்கும் திறன் என்பன சிறந்த வேளாண்மைக்கான அடிப்படைகளாக அமைவது போல் பெற்றோர் பண்பான குடும்பபந்தம், பெற்றோரின் சிறந்த மனோபாவம் என்பன தரமான குழந்தைகளை உருவாக்கும் அடிப்படைகளாகின்றன. சிறந்த விவசாயியின் வேளாண்மை வீடுசேர்வது போல் சிறந்த பெற்றோர்களின் குழந்தைகளும் வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமை தேடித் தருப்பவர்களாக இருப்பார்கள்.

இதுவரையில் வீட்டுக்கும் நாட்டுக்கும் பயன்தரும் இளம் சமுதாயத்தை உருவாக்கு வதற்குப் பெற்றோர், குடும்பபந்தம், மனோ பாவங்கள் என்பன எவ்வளவு தூரம் அவசியம் என்பது உணர்த்தப்பட்டிருப்பதற்குக் காரணம் பல குடும்பங்கள் குறிப்பாகப் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் சிறந்த குழந்தைகளைப் பெற்றிருப்பினும் பெற்றோர்களுக்கிடையிலான முரண்பாடுகள், சந்தேகங்கள் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையின்மை, குழந்தைகளின் பெற்றோர் என்பதை புறக்கணித்துச் சுயநலப்போக்கைக் கொள்ளுதல், வாக்குவாதம், சிறிய விடயங்களைக் பூதாகார-மாக்கி ஒருவரையொருவர் அளவுக்கதிகமாக வெறுத்தல், ஒரேவீட்டில் பிரிந்து வாழ்தல், குழந்தைகளைப் புறக்கணித்து வேறுவேறாக வாழ்தல், விவாகரத்து என்பன வளரும் பயிரின் மீது எல்லையற்ற சுமைகளை செலுத்துவதுடன் பாதுகாப்பற்ற உணர்வு, நம்பிக்கை யுடையவர்களது நெறிப்படுத்தல் இன்மை, விரக்தி என்பவற்றை ஏற்படுத்தி அனுபவமற்ற முடிவுகளை மேற்கொள்வதற்கு வழி வகுக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் இவர்களது முடிவுகள், பெற்றோருக்கு எதிரானவையாகவும் அமைவதுண்டு. இவ்வாறான சூழ்நிலை களுக்குள் குழந்தைகளை நிர்ப்பந்திக்கும் பெற்றோர்களும், இவ்வாறான சூழ்நிலைகளைத் தமக்குச் சாதமாக்கித் தவறான முடிவுகளை மேற்கொள்ளும் குழந்தைகளும் வீட்டுக்கும் நாட்டுக்கும் உதவாத மனிதப்பிறவிகள். இன்னொரு வகையில் கூறுவதாயின் வீடு சேராத வேளாண்மைகள்.


**KG Master**
416.725.5112







**KG Master**
**(416) 725-5112**
**(416) 763-0332**

**Helping You and Your Family Move Forward**

| | |
|---|---|
| **Character Education** *for your children* | *Week-end Classes for 9 to 17 years old* |
| **Building Self-Esteem** *of your children* | Guidance and direction for Parents who have 2 to 8 years old children |
| **Building a Happy Family** | *Practical ideas and directions for all members of your family* |

**Email: kgm@kgmaster.com** **Web: www.kgmaster.com**

# இராமேஸ்வரம் - புண்ணியஸ்தலம்

13ஆம் பக்கத் தொடர்ச்சி

செய்து பேறு பெறக்கூடிய இடம் தனுஷ்கோடி. இலங்கையிலிருந்து வந்த இராமன் இங்கே நீராடியதாகக் கருதப்படுகிறது. கடல் சீற்றத்தால் அழிந்த தனுஷ்கோடியின் எச்சங்கள் மட்டுமே இப்போ அங்கே உள்ளன. கண்ணுக்கு எட்டிய தொலைவுவரை தெரியும் வெண்மயான நீண்ட



கடற்கரை, இரண்டு பக்கமும் சூழ்ந்திருக்கும் கடல், ஆங்காங்கே தங்கள் வேலைகளில் மும்முரமாக இருக்கும் மீனவர்கள்... இவைகள் தனுஷ்கோடியின் அழகு.
இராமேஸ்வரத்திற்கு செல்லும் வழியில், வரலாற்று சிறப்பும் புராதனப் பெருமையும் கொண்ட சில முக்கிய ஊர்கள் உள்ளன. இவையும் பார்க்க வேண்டியவை. இராமநாதசுவாமி கோயில் வரலாற்றுடன் தொடர்புடைய ஊர்கள் இவை. இராமநாதபுரத்திலிருந்து திருவாடன, தேவகோட்ட வழியாக காரக்குடி செல்லும் சாலையில் இராமநாதபுரத்திலிருந்து 15 கி.மீ. வடக்கே கடற்கரயோரத்தில் உள்ள தேவிபட்டினம். இந்த ஊருக்கு "நவபாஷணம்" என்ற பெயரும் உண்டு.



நவக்கிரகங்களைக் குறிக்கும் ஒன்பது கல் தூண்கள் இவ்வூர் கடலுக்குள் உள்ளன. இராமன் இங்கு வந்து வழிபட்டபோது, இத்தூண்களை நிறுத்தியதாக ஐதீகம். இராமேஸ்வரம் செல்லும் யாத்திரிகர்கள் இங்கு வந்து சர்க்கர தீர்த்தத்தில் நீராடி, கிரக சாந்தியும் செய்கின்றனர். இந்த ஊரில் உள்ள உலகம்மன் ஆலயம் பிரசித்தி பெற்றது. இங்கு மாணிக்கவாசகர் திருவுருவம் உள்ளது.

இராமநாதபுரத்திலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ளது திருப்புல்லாணி. இராமன் புல்லைத் தலயணையாக வைத்து உறங்கிய இடம் இது எனக் கூறப்படுகிறது. வடமொழியில் இதை தர்பசயனம் என்று கூறுகிறார்கள். இங்குள்ள ஜகன்னாதப் பெருமாள் ஆலயம், திருமங்கை ஆழ்வாரால் பாடல் பெற்றது. இராவணன் தம்பி விபீஷணன் இராமனிடம் சரண் அடைந்த ஊரும் இதுதான். திருப்புல்லாணி இறைவனுக்கு, "தென்னகத் தமிழான்" என்ற பெயரும் உண்டு. திருப்புல்லாணியில் தங்கி யோசித்த பிறகுதான், இராமர் கடலைக் கடந்து இலங்கை சென்றார் எனக் கூறப்படுகிறது. திருப்புல்லாணியிலிருந்து, தெற்கே 4 கி.மீ. தொலைவிலும், இராமநாதபுரத்திலிருந்து 17 கி.மீ. தொலைவிலும் உள்ளது சேக்கரை. இங்குள்ள கடல் சேது சமுத்திரம் எனப்படுகிறது. இந்த சேது சமுத்திரக் கரையில் மதச் சடங்குகள் நடைபெறுகின்றன. இராமநாதபுரத்திலிருந்து 30 கி.மீ. வடக்கே தொண்டிக்குத் தென்மேற்கே உள்ள உப்பூர். இந்த ஊரில் உள்ள பிள்ளையார் கோயில் பிரசித்தி பெற்றது. இராமர் இலங்கை செல்லும் வழியில் இந்தக் கோயிலில் உள்ள விநாயகரை வணங்கியதாகக் கூறப்படுகிறது.

இராமநாதபுரத்திலிருந்து தென்மேற்கில் 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது உத்தரகோசமங்கை. சிவபிரான் வேதங்களின் மறைபொருளைப் பார்வதிக்கு உணர்த்தியதால் இத்தலம் உத்தரகோசமங்கை என்று பெயர் பெற்றது என்பது ஐதீகம். கோசம் - வேதம், உத்தரம் - திரும்பப் பெறும் விடை, மங்கை - பார்வதி. இத்தலத்திற்கு மங்களபுரி, தட்சிணகாசி, சர்வேதபுரி என பல பெயர்கள் உண்டு. ஆதி சிதம்பரம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. சுமார் ஏழு ஏக்கர் நிலப்பரப்பில் உத்தரகோச மங்கை ஆலயம் உள்ளது. கிழக்கு வாயிலில் 120 அடி உயரமுடைய ஏழுநில இராஜகோபுரமும், அதனை அடுத்து 64 அடி உயரமுள்ள ஐந்து நில இரண்டாம் கோபுரமும் உள்ளன. இங்கு கருவறையில் எழுந்தருளியிருக்கும் இறைவன் திருநாமம் - மங்களநாதர், அம்பிகை - மங்கள நாயகி. இங்கு நவக்கிரகங்களுள் சனீஸ்வரர் மட்டுமே காட்சியளிக்கிறார். பிற கிரகங்கள் இல்லை. இங்குள்ள தனிச்சன்னதியில் மரகத நடராஜர் சிலை வனப்பு மிக்கது. அருகில் உள்ள பாண்டிய மன்னர்களும், சேதுபதி மன்னர்களும் இவ்வாலயத்திற்குத் திருப்பணிகள் செய்துள்ளனர்.

இராமநாதபுரத்தில் உள்ள சேதுபதி மன்னர்களின் அரண்மனையும் பார்க்க வேண்டிய முக்கியமான இடம். "இராமலிங்க விலாசம்" என அழைக்கப்படும் இந்த அரண்மனை சேதுபதி மன்னர் காலத்தில் (1647-1710) கட்டப்பட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வரண்மனைக்குள் இராமநாதபுரம் சீமைக்கும், தஞ்சைக்கும் நடை-பெற்ற போர்க் காட்சிகள் வண்ண ஓவியங்களாகத் தீட்டப் பெற்றுள்ளன. 64 காம லீலைகளின் ஓவியங்களும் உள்ளன. மேலும் ஸ்ரீ ராமபிரானால் முதல் சேதுபதி மகுடம் சூட்டப் பெற்ற குகசேதுபதி அமர்ந்திருந்த கல் உள்ளது. இதே நகரில் விவேகானந்தர் தங்கியிருந்த மாளிகை "சங்கர விலாசம்" என்று அழைக்கப்படுகிறது. கிழவன் சேதுபதி இறந்தவுடன் அவருடைய மனைவிமார்கள் உடன்கட்டை ஏறிய இடமும் உள்ளது. இந்நகரில் உள்ள இராஜராஜேஸ்வரி ஆலயம் புகழ் பெற்றது. அரண்மனையில் உள்ள இக்கோயிலை தினந்தோறும் சேதுபதிகள் வழிபடுவது மரபாகும்.

### எப்படி செல்வது? எங்கே தங்குவது?

இராமேஸ்வரத்திற்கு நேரடியாக சென்னையில் இருந்து ரயில் உள்ளது. பேரூந்து வசதியும் உள்ளது. இராமநாதபுரம் சென்று, அங்கிருந்தும் இராமேஸ்வரம் செல்லலாம். இராமநாதபுரத்தில் இருந்து அடிக்கடி பேரூந்து வசதி உள்ளது. ஆனால், இராமேஸ்வரத்தில் உள்ள தமிழ்நாடு சுற்றுலாக் கழகத்திற்குச் சொந்தமான ஓட்டல் தவிர, நல்ல உணவு விடுதியும் லொட்ஜும் இராமேஸ்வரத்தில் இல்லை. எனவே, இராமநாதபுரத்தில் தங்கிச் செல்வதே சிறந்தது.


**யோகா சோதிடம்**

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

**416-299-8361**



**Director - Kim Ki-duk**

# The Bow – South Korea – 2005




ஒரு சமுத்திரத்தில், ஆள் அரவமற்ற கடலில் படகு ஒன்று மிதக்கின்றது. அந்தப் படகு வாசிகள் இருவர். முதலாவது ஒரு வயோதிபர் Jeon Sung-hwan, மற்றையது ஒரு சிறுமி Han Yeo-reum. இன்னமும் 17 வயது நிரம்பவில்லை. பத்து வருடத்துக்கு முன்னர் இந்தச்சிறுமியை, வயோதிபர் கண்டெடுத்தார். வயோதிபர் இளம் பெண் - சிறுமியின் 17 வது வயது வருவதற்கான நாட்களை எண்ணிக்கொண்டிருக்கின்றார். வயோதிபரின் வயது சுமார் 60 க்கும் மேல். வயோதிபர் நாட்களை எண்ணுவதற்கு காரணம் சிறுமியை திருமணம் செய்வற்காகவே. கடந்த 10 வருடங்களாக சிறுமி படகை விட்டு வெளியே எங்கும் செல்லவில்லை. வயோதிபரது பொழுது போக்கு, அம்பும், வில்லும். (இதனைக் கொண்டுதான் சிறுமியை காத்தும் வருகின்றார்.). அத்துடன் மரத்தாலான ஓர் இசைக் கருவியையும் வாசிப்பார். இவர்களது வருமானம், கடலில் மீன் பிடிக்க வரும் மீனவர்களுக்கு உதவி செய்வதன் மூலமும், அவர்களுக்கு படகில் தங்க இடம் கொடுப்பதன் மூலமும் சம்பாதிக்கின்றார்கள். படகில் தங்குவதற்கு ஓர் இளம் வாலிபன் வருகின்றான். அவன் வயோதிபர் மீது குற்றங்களை சுமத்துகின்றான். வயோதிபர், சிறுமியை சிறையில் வைத்துள்ளார். அடிமைத்தனம் செய்கின்றார். வயோதிபர் அசைந்து கொடுக்கவில்லை. கரைக்குச் செல்லும் வாலிபன், சிறுமியின் பெற்றோர் காணவில்லை எனக் கொடுத்த பத்திரிகை விளம்பரத்தையும் காட்டுகின்றான். வயோதிபர் விளம்பரத்தை கசக்கி எறிகின்றார். அனைவரிடமிருந்தும், தனது வில், அம்பினால் காப்பாற்றுகின்றார். சிறுமி வெளி உலகைக் காண விழைந்தாலும், இளம் வாலிபன் மீது பாசம் காட்டிய பொழுதிலும், வயோதிபரையே சார்ந்து இயங்குகின்றாள்.



இவர் நெறியாள்கை செய்த படங்கள்.

- 2004 - 3-Iron
- 2004 - Samaritan Girl
- 2003 - Spring, Summer, Autumn, Winter…and Spring
- 2002 - The Coast Guard
- 2001 - Bad Guy
- 2000 - The Isle

Kim Ki-duk ன் முந்தைய படங்களை போல் இல்லாவிடிலும், இப்படம் ஒரு magical realism வகையைச் சாரா்ந்தது. இவ் வகையில் வெளி வந்த சில படங்கள் Daughters of the Dust Antonia's Line., Pan's Labyrinth, Urchin, Kala, Orphée, The Night of the Hunter, Amélie, An Autumn's Tale, The Science of Sleep, Apocalypse Oz, El Norte, The Lake House (film), The Milagro Beanfield War. படம் முடியும் வரை சிறுமியும், வயோதிபரும் எந்த வசனங்களும் பேசவில்லை. நடுக் கடலில், பின்னணனி இசையையும், இவர்களது உணாச்சிகளுமே காட்சிப்படிமங்களை நகர்த்துகின்றன. குறியீடுகள் படம் முழுவதும் நிரம்பி உள்ளன. புத்த தத்துவங்களும் படத்தின் பின்னணியை நிரப்புகின்றன. திருமணம் என்பது என்ன? முரண்பட்ட யதார்த்தத்தில் இன்னமும் பல தம்பதிகள் எவ்வாறு தொடர்ந்து வாழ்கின்றனர்? சார்ந்து இயங்குதல் என்பது, எமது வாழ்வியலின் ஓர் அம்சமாகிவிட்டது. இதனால் தான் குற்றங்களுக்கு எதிராக இயங்காமல், சமநிலையில் இயங்குகின்றோம்.

படத்தில் கிழவர் இறுதிவரை குற்ற உணர்வுடன் தன்னை வெளிப்படுத்தவில்லை. தனது பொருள் என்ற உணர்வுடன் செயல்படுகின்றார். சிறுமியை குளிப்பாட்டும் காட்சிகள், ஒரு பொம்மையை குளிப்பாட்டுவது போலவே தோன்றுகின்றது. இதுதான் திருமணத்தின் கோரமா? பெண் என்பவள் ஒரு பொருளா?, ஆணுக்கும், பெண்ணுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? கலாசாரரீதியாகவும், சமூக கட்டுமானங்களின் முரண் நிலைகளையும் படம் விமர்சிக்கின்றது. ஆண் பெண்ணுக்கிடையிலான உறவு ஒருவகை விபச்சாரம் போன்றது. பெண்கள் ஆண்களைவிட மேலாவனவர்கள். பெண்களிடம், ஆண்களுக்குத் தேவையான பல விடயங்கள் உள்ளன என Sense of Cinema ல் தெரிவித்துள்ளார்.

## தூறல்

## வானரன்

The bow பற்றி இவர் வைகாசி 12, 2006 Hollywood Reporter க்குத் தெரிவித்த கருத்து முக்கியமானது. “வயோதிபம் அடைய அடைய மனிதர்கள் தாங்கள் செய்வதற்கு எதுவும் இல்லை என நினைக்கின்றாாகள்... மனிதன் இறக்கும் அந்தக் கணம் வரை செய்வதற்கு பல விடயங்கள் உள்ளன. இதனையும் நான் இப்படத்தில் காட்டியுள்ளேன்.” இப் படத்து கிழவரது வாழ்க்கை 60 வயதில் ஆரம்பமாகின்றது.

